தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

17.04.2013 A.M

## விவசாயிகளின் தகவல்கள் இணையதளத்தில் பதிவு

விவசாயிகள் குறித்த அனைத்துத் தகவல்களும் வேளாண்மை துறையின் இணைய தளத்தில் பதியப்பட்டு அதன் மூலம் வேளாண்மை அபிவிருத்தி செய்யும் பணியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது என வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகையா தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த அயநெல்லூர் ஊராட்சியில் உழவர் பெருவிழா அண்மையில் நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் அமுதா ஜெகதீசன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் டில்லிகுமார், ஒன்றிய கவுன்சிலர் சூர்யா, உதவி வேளாண்மை அலுவலர் சிவகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகையா பேசியது:

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறைகளின் சார்பாக விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த கையேட்டை தமிழக அரசு அறிமுகப்படுத்தி உள்ளது.

உழவர் பெருவிழாக்களில் இந்த கையேட்டை விவசாயிகளுக்கு அளித்து அதில் விவசாயிகளின் விவரம், அவர்களின் நில விவரம், பயிர் சாகுபடி மற்றும் மண் வளம் குறித்த விவரங்கள் பதியப்பட்டு விவசாயிகளின் புகைப்படம் ஒட்டி அவர்களிடம் கொடுக்கப்பட்டு இந்த விவரங்கள் வேளாண் துறையின் இணைய தளத்தில் பதியப்படும்.

இந்த விவரங்களை கொண்டு விவசாயிகளுக்கு அரசின் உதவிகள் வந்தடையும். அதே நேரம் விவசாயிகள் இந்த கையேட்டைக் கொண்டே அரசின் மானியம் மூலம் உரங்கள் மற்றும் இடுபொருட்களைப் பெற முடியும் என்றார்.

தொடர்ந்து துணை வேளாண் அலுவலர் ராஜேந்திரன், வேளாண் பொறியியல் துறை பொறியாளர் துரைசாமி, வேளாண் விற்பனை மற்றும் வணிகப் பிரிவு அலுவலர் அருள்முருகன் ஆகியோர் நவீன விவசாய முறைகள் குறித்துப் பேசினார்.

பிறகு விவசாயிகளுக்கு நடவு இயந்திரம் குறித்த செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. கையேடுகள், மானிய விலையில் உரங்களை ஊராட்சி மன்றத் தலைவர் வழங்கினார்.

ரெட்டம்பேடு: ரெட்டம்பேடு ஊராட்சியில் உழவர் பெருவிழா ஊராட்சி மன்றத் தலைவர் கே.ஆர்.கே.முரளி தலைமையில் நடைபெற்றது.

துணைத் தலைவர் துரைவேல், ஊராட்சி உறுப்பினர் மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பல்வேறு ஆலோசனைகளை பெற்றுச் சென்றனர்.

## செல்போன் மூலம் விவசாயிகளுக்கு தகவல் அனுப்ப நடவடிக்கை

விவசாயிகளுக்கு உயர் சந்தை விலை மற்றும் சந்தை நுண்ணறிவு உள்ளிட்ட விவரங்கள் செல்போன் மூலம் குறுஞ்செய்தி தகவலாக அனுப்பி வைக்கப்படும் என, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்நாடு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் மூலம் உள்நாடு மற்றும் சர்வதேச சந்தையில் முக்கிய விளைப் பொருள்களுக்கான விலை விவரங்களைச் சேகரித்து, திருச்சி வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையத்துக்கு அளித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நான்கு வகையான சந்தை நுண்ணறிவு குறித்த விவரங்கள் குறுஞ்செய்தியாக விவசாயிகளின் செல்போன்களுக்கு அனுப்பப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம், விளைபொருள்களுக்கான உயர் சந்தை விலை விவரம், சந்தை விவரம், சந்தைப்படுத்தும் கால விவரம், எந்த விளைபொருளுக்கு எந்தக் காலத்தில் உயர் சந்தை விலை கிடைக்கும் உள்ளிட்ட விவரங்கள் தெரிவிக்கப்படும். தற்போது இத்திட்டம், திண்டுக்கல் மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட உள்ளது. எனவே, விவசாயிகள் தங்கள் அலைபேசி எண்களை வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறையில் பதிவு செய்து, சந்தை நுண்ணறிவு விவரங்களை பெற்று பயனடையலாம் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுகுறித்த கூடுதல் விவரங்களைப் பெற, திண்டுக்கல் வேளாண்மை துணை இயக்குநரை (வேளாண் வணிகம்), 94425-61821 என்ற எண்ணிலும், விற்பனைக் குழு செயலரை 0451-2460062 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்றும்,

ஜ்ஜ்ஜ்.ஹஞ்ம்ஹழ்ந்ய்ங்ற்.ய்ண்ஞ்ரீ.ண்ய்,ஜ்ஜ்ஜ்.ற்ய்ஹஞ்ம்ஹழ்ந்.ற்ய்.ய்ண்ஞ்ரீ.ண்ய், ஜ்ஜ்ஜ்.ய்ட்க்ஷ.ஞ்ர்ஸ்.ண்ய், ஜ்ஜ்ஜ்.ய்ஞ்ரீக்ங்ள்ஷ்.ஞ்ரீர்ம், ஜ்ஜ்ஜ்.ண்ண்ஞ்ரீல்ற்.ங்க்ன்.ண்ய் உள்ளிட்ட வலைதளங்கள் மூலமாகவும் விளை பொருள்களுக்கான விலைகளை விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம் என்றும், அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் 104 டிகிரி வெயில்: தமிழகத்தில் இன்று மழை வாய்ப்பு

தமிழகத்தின் 8 நகரங்களில் செவ்வாய்க்கிழமையன்று (ஏப்.16) 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் பதிவானது. மாநிலத்திலேயே அதிகபட்சமாக மதுரையில் 107 டிகிரி வெயில் சுட்டெரித்தது.

சென்னை, கரூர் பரமத்தி, நாகப்பட்டினம், பாளையங்கோட்டை, சேலம், திருச்சி, வேலூர் உள்ளிட்ட இடங்களிலும் 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் இருந்தது.

கோடை உச்சமடைந்ததை அடுத்து மாநிலம் முழுவதும் அனல் காற்றுடன் கூடிய வெயில் சுட்டெரித்து வருகிறது.

இந்த நிலையில் வெப்பச் சலனம் காரணமாக திங்கள்கிழமை மாலை மற்றும் செவ்வாய்க்கிழமை காலை  பாளையங்கோட்டை, தருமபுரி, சங்கரன்கோயில், சாத்தான்குளம், கிருஷ்ணகிரி, ஈரோடு, உதகமண்டலம், நாமக்கல் உள்ளிட்ட இடங்களில் பரவலாக மழை பெய்தது. வெப்பச் சலனம் காரணமாக புதன்கிழமையும் (ஏப்.17) தமிழகத்தின் உள்மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கோவை, ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்ய அதிக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செவ்வாய்க்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):

மதுரை 107

திருச்சி 106

சென்னை 104

சேலம், வேலூர்,

கரூர் பரமத்தி 103

பாளையங்கோட்டை 101

நாகப்பட்டினம் 100

கடலூர், தருமபுரி,

புதுச்சேரி 99

கோவை 98

தூத்துக்குடி 96

கன்னியாகுமரி 95

குன்னூர் 78

**"சென்னையில் மழைநீர் சேகரிப்பு குறித்து தணிக்கை'**

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் சென்னையில் மழை நீர் சேகரிப்பு குறித்து தணிக்கை மேற்கொள்ளப்படும் என்று வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையில் அவர் வெளியிட்ட அறிவிப்புகள்:

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வளர்ச்சி விதிமுறையில் ஒவ்வொரு கட்டடத்துக்கும் மழைநீர் சேகரிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மழைநீர் சேகரிப்பு முறையை வலுவாக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் தணிக்கை மேற்கொள்ளப்படும்.

பரந்த குடியிருப்புகளில் மக்களின் பொழுதுபோக்கு வசதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட திறந்தவெளி இடங்களில் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆலோசனையுடன் விளையாட்டு உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் நில உபயோகத் தகவல்களை இணையதளம் மூலம் அறிந்து கொள்ளும் வகையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும நில உபயோகத் தகவல் தொகுப்பு உருவாக்கப்படும்.

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த பல்வேறு போக்குவரத்து முறைகளை ஒருங்கிணைப்பது குறித்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆய்வு மேற்கொள்ளும்.

வண்டலூரிலிருந்து மீஞ்சூர் வரை 63 கி.மீ. நீளத்துக்கு அமைக்கப்பட்டு வரும் வெளிவட்டச் சாலையின் கிழக்குப் பகுதியில் எதிர்காலப் போக்குவரத்து வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 மீட்டர் நிலப்பகுதியின் மேம்பாடு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றார் அமைச்சர் வைத்திலிங்கம்.

## 19-ல் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளின் மாதாந்திர குறை தீர்வுநாள் கூட்டம் வரும் ஏப்ரல் 19-ல் (வெள்ளிக்கிழமை) நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மாதந்தோறும் நடத்தப்படும் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் ஏப்ரல் 19-ல் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் ஆட்சியர் கொ.வீரராகவராவ் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் விவசாயம் சார்ந்து வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடைத் துறை, மீன்வளத் துறை, மின்சார வாரியம், பொதுப்பணித் துறை, கூட்டுறவுத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்களும் பங்கேறு விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வுகாண உள்ளனர்.

எனவே மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பருவ மழை பொய்த்ததால் மலைவாழைப் பழம் விளைச்சல் குறைந்தது

கொடைக்கானலில் பருவ மழை பொய்த்ததால் மருத்துவ குணமுள்ள மலைவாழைப் பழம் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

கொடைக்கானல் மலைப் பகுதியில் இயற்கை எழில் சூழ்ந்த கீழ்மலைப் பகுதிகளான பண்ணைக்காடு, தாண்டிக்குடி, வடகவுஞ்சி, கே.சி.பட்டி, கடுகுதடி, வாழைகிரி, மச்சூர், வடகரைப்பாறை உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை, பலா, ஆரஞ்சு, காபி ஆகியவை விளைவிக்கப்படுகிறது. இதில் மலை வாழைப் பழம் மிகவும் முக்கியமாக விளங்குகிறது. ஆண்டு தோறும் மலைவாழை பயிரிடப்பட்டு அவற்றை பாதுகாத்து வந்தாலும் வாழைக்கு அதிக அளவு தண்ணீர் இருந்தால் விளைச்சால் அதிகமாக வருவது வழக்கம்.

ஆனால் கொடைக்கானலில் கடந்த பல மாதங்களாக பருவ மழை இல்லாமலும், அவ்வப்போது பெய்யும் மழையும் இல்லாததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறது. இதில் மலைவாழையை விவசாயிகள் அதிக அளவில் பயிரிட்டு வருகின்றனர். இப் பழமானது மருத்துவ குணமுள்ளது. உடலுக்கு சத்துள்ளதாகவும்,நோய்

எதிர்ப்பு சக்தி உள்ளதாகவும்,குடலை சுத்தமாக வைத்திருப்பதாலும் இப் பழத்திற்கு ஏதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது.

கொடைக்கானல் மலைப் பகுதிகளில் விளைவிக்கப்படும் மலை வாழைப் பழம் சென்னை, கேரளத்துக்கும் மற்றும் பஞ்சாமிர்தம் செய்யப்படும் கோயில்களில் அதிக அளவு பயன்படுத்துவதால் இப்பழத்துக்கு மார்க்கெட்டில் நல்ல மதிப்பு இருந்து வருகிறது. கொடைக்கானல் பகுதியான கவுஞ்சியில் இருந்து வாரத்திற்கு இரண்டு முறை வாழைப்பழம் சந்தை ஏற்படுத்தப்பட்டு வெளியூர்களிலிருந்து வியாபாரிகள் நேரே வந்து விவசாயிகளிடம் கொள்முதல் செய்கின்றனர்.

இது குறித்து மலை வாழை விவசாயிகள் கூறியதாவது: கொடைக்கானல் மலைவாழைப் பழம் மருத்துவ குணமுள்ளதாக இருப்பதால் இதற்கு தனிச்சிறப்பு இருந்து வருகிறது.

பருவ மழை இருந்திருந்தால் வாரத்திற்கு ஒரு லட்சம் முதல் ஒரு லட்சத்து 70-ஆயிரம் வாழைக்காய் வெளியூர்களுக்கு கொண்டு செல்லப்படும் ஆனால் தற்போது மழை இல்லாததால் வாரத்திற்கு 30-ஆயிரம் முதல் 50-ஆயிரம் வாழைக்காய்கள் கொண்டு செல்லப்படுகின்றன.

மேலும் வாழைத் தோட்டத்தில் காட்டெருமை, பன்றி, சில நேரங்களில் யானைகள் புகுந்து நாசம் செய்து வருவதால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறோம்.

மேலும் வாழைப் பழத்தை கொண்டு வருவதற்கு பல இடங்களில் போக்குவரத்து வசதிகள் இல்லாததால் பாதிப்பு அடைந்து வருகிறோம் என்றனர்.

இது குறித்து தோட்டக்கலைத்துறை அலுவலர் கூறுகையில், கொடைக்கானல் மலைப் பகுதிகளில் விளைவிக்கப்படும் மலைவாழைகளில் நோய் தாக்குதல் அவற்றை சரி செய்யும் முறை குறித்தும் பல்வேறு பிரச்னைகளுக்கு இலவசமாக ஆலோசனை மற்றும் மருந்துகள் வழங்கியும் வருகிறோம். விவசாயிகள் நேரடியாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகளை அனுகி உதவிகளை பெற்றுக் கொள்ளலாம் என்றார்.

இது குறித்து வனத்துறை அலுவலர் ஒருவர் கூறுகையில், தற்போது வனப் பகுதகளிலிருந்து வன விலங்குகள் உணவைத் தேடி அலைந்து வருகின்றன. வனப் பகுதிகளை ஒட்டியுள்ள தோட்டங்களில் விவசாயிகள் சோலார் மின் வேலிகள் அமைத்துக் கொள்ளலாம். இருப்பினும் அரசு சார்பில் சோலார் மின் வேலிகள் அமைப்பது குறித்து ஆலோசனை நடைபெற்று வருகிறது என்றார்.

### சூறைக் காற்றில் 1 லட்சம் வாழைகள் சேதம்

தேனி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் திங்கள்கிழமை இரவு வீசிய சூறைக் காற்றில், மொத்தம் 100 ஏக்கர் பரப்பளவில் 1 லட்சம் வாழை மரங்கள் ஒடிந்து விழுந்து சேதமடைந்தன.

மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது.

ஆறுகள் நீர்வரத்தின்றி வறண்டு காணப்படுகின்றன. கிணறுகளில் தண்ணீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. சில நாள்களுக்கு முன் பெய்த மழையால் கோடை வெப்பம் சற்று தணிந்தது.

இந்த நிலையில், திங்கள்கிழமை இரவு பல்வேறு இடங்களில் சூறைக் காற்று வீசியது.

பலத்த காற்றில் சிக்கி சீப்பாலகோட்டை, கன்னியப்பபிள்ளைபட்டி, ஜங்கல்பட்டி, கொடுவிலார்பட்டி ஆகிய இடங்களில் 100 ஏக்கர் பரப்பளவில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் ஒடிந்து விழுந்து சேதமடைந்துள்ளன.

இது குறித்து, சீப்பாலகோட்டையைச் சேர்ந்த விவசாயி சன்னாசி கூறியது: சீப்பாலகோட்டை, கன்னியப்பபிள்ளைபட்டி பகுதியில் 200 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதியில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

சூறைக் காற்று வீசியதில் பெரும்பாலான இடங்களில் வாழை மரங்கள் ஒடிந்து விழுந்து முற்றிலும் சேதமடைந்துள்ளன.

50 ஏக்கர் பரப்பளவில் முருங்கை மரங்கள் ஒடிந்து விழுந்துள்ளன.

தார் தள்ளிய நிலையில் வாழை மரங்கள் சேதமடைந்துள்ளதால், ஒரு ஏக்கருக்கு ரூ. 3 லட்சம் வரை வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. சூறைக் காற்றால் வாழையில் ஏற்பட்டுள்ள சேதத்தை மதிப்பீடு செய்து, அரசிடம் நிவாரணம் பெற்றுத் தர விவசாயத் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்

## உழவர் பெருவிழா

சிவகங்கை மாவட்டம் எஸ்.புதூர் ஒன்றியம் குளத்துப்பட்டி கிராமத்தில் உழவர் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு ஒன்றியக்குழுத் தலைவர் கே.எம்.ராஜமாணிக்கம் தலைமை தாங்கினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணன் முன்னிலை வகித்தார். மதுரை வேளாண்மை கல்லூரி பேராசிரியர் வேலுச்சாமி விழாவில் கலந்து கொண்டு உழவர்களுக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் விழாவில் கால்நடைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். விழாவில் மண் மாதிரி ஆய்வு முடிவுகள், ஒருங்கிணைந்த உழவர் கையேடு ஆகியவைகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டன. விழா முடிவில் உழவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. மேலும் கருத்துக்காட்சி, கலை நிகழ்ச்சிகளும் விழாவில் நடத்தப்பட்டன.

## "உற்பத்தியை இரு மடங்கு உயர்த்துவதே உழவர் பெருவிழாவின் நோக்கம்'

விவசாயப் பொருள்களின் உற்பத்தியை இரண்டு மடங்கு உயர்த்துவதே உழவர் பெருவிழாவின் நோக்கம் என்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தெரிவித்தார்.

காரைக்குடி தாலுகா ஜெயங்கொண்டான் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழா நிகழ்ச்சியில் தலைமைவகித்து அவர் பேசியது: விவசாயப் பொருள்களை இரண்டு மடங்கு உற்பத்தி செய்வதற்கு விவசாயிகள் நன்கு பயிற்சி பெறவேண்டும். அதற்காகவே தமிழக முதல்வரால் இந்தத்திட்டம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இதன் மூலம் வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல்துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளர்ப்புத்துறை, ஆவின் ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து இம்மாவட்டத்தில் உள்ள 521 வருவாய்க் கிராமங்களிலும் முகாம் நடத்தி உழவர்களுக்குப் பயிற்சிகளும், நலத்திட்டங்களும் வழங்குவதற்காக முகாம் நடைபெற்று வருகின்றன. இந்த உழவர் பெருவிழா நிகழ்ச்சியில் விவசாயிகள் முழு அளவில் கலந்துகொள்ளவேண்டும்.

தங்கள் பகுதியின் விவசாய நிலங்களில் உள்ள மண்தன்மையை அலுவலர்களிடம் ஆய்வு செய்து, அதற்கேற்ப பயிர்களை பயிரிடவேண்டும். அப்பொழுதான் திட்டமிட்டபடி அதிகலாபம் பெறமுடியும். விவசாயப் பணிக்கு ஆள்பற்றாக்குறை என்ற காரணம் கூறாமல் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நவீனவகை கருவிகளை மானியத்துடன் கடன் திட்டத்தின் கீழ் பெற்று உற்பத்தித்திறனை அதிகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார் ஆட்சியர்.

இந்நிகழ்ச்சியில் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் கா. சுப்பிரமணியன், வேளாண்மை இணை இயக்குநர் செல்லத்துரை, உதவி இயக்குநர் மணிவண்ணன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் அடைக்கலம், அரசு அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வன விலங்குகளிடமிருந்து விவசாயிகளைக் காக்க நடவடிக்கை

தமிழக வனப்பகுதிகளை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் வன விலங்குகள் புகுந்து நாசம் விளைவிப்பதைத் தடுக்க தமிழக அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என வேளாண்மை உதவி இயக்குநர் ஷபி அகமது தெரிவித்தார்.

பெ.நா.பாளையம் வேளாண் துறை சார்பில் செல்வபுரம், வன மாரியம்மன் கோவில் வளாகத்தில் செவ்வாய்க்கிழமை உழவர் பெருவிழா நடந்தது. கூடலூர் கவுண்டம்பாளையம் பேரூராட்சித் தலைவர் அ.அறிவரசு தலைமை வகித்தார்.

கண்காட்சியைத் திறந்து வைத்து ஷபி அகமது பேசியது: செல்வபுரம் உள்ளிட்ட மலையோர கிராமங்களில் பெருமளவில் நடந்து வந்த விவசாயமானது, யானை போன்ற வன விலங்குகளால் பாதியாகக் குறைந்து விட்டது.

கேரள அரசு வனத்துறையின் அனுமதியுடன் வன விலங்குகளை சுட்டுக் கொல்ல அனுமதியளித்துள்ளது. தமிழகத்திலும் இம்முறையை அமல்படுத்தி விவசாயத்தைக் காப்பாற்ற சட்டப்பேரவையில் கலந்தாலோசனை நடந்துள்ளது. இதுகுறித்து முடிவெடுக்க குழுவும் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

தோட்டக்கலை, பட்டு வளர்ப்பு, விதைச் சான்று, கால்நடை துறைகளின் அதிகாரிகள் தங்களால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் பெறும் முறைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இதனையடுத்து சிறந்த விவசாயிகளுக்கு இடுபொருள்கள், விதைகள், வேளாண் அட்டைகள் வழங்கப்பட்டன.

விழாவில் வேளாண்மை துணை இயக்குநர் வின்சென்ட் மனோகரன், பேரூராட்சி துணைத் தலைவர் செல்வராஜ், வித்யாலய வேளாண்மைக் கல்லூரி முதல்வர் சங்கரலிங்கம், கவுன்சிலர்கள் கணேஷ், ராதாகிருஷ்ணன், விவசாயப் பிரமுகர்கள் வேலுச்சாமி, ரங்கசாமி, எம்.ராமசாமி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்

## பவானிசாகர் பகுதியில் சூறாவளி: ரூ.45 லட்சம் வாழைகள் சேதம்

பவானிசாகர் பகுதியில் செவ்வாய்க்கிழமை வீசிய சூறாவளிக் காற்றால் ரூ.45 லட்சம் மதிப்புள்ள வாழைகள் சேதமடைந்தன. பலத்த சூறாவளிக் காற்று வீசிய பகுதிகளில் ஆலங்கட்டி மழை பெய்தது.

பவானிசாகர் அடுத்துள்ள புங்கார் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் ரஸதாளி, கதளி, செவ்வாழை மற்றும் ஜி9 ரக வாழைகள் சாகுபடி செய்யப்பட்டிருந்தன. இந் நிலையில், செவ்வாய்க்கிழமை வீசிய சூறாவளிக் காற்றால் இந்த வாழை மரங்கள் முறிந்து விழுந்தன.

புங்காரைச் சேர்ந்த ராஜகோபால், நாகராஜ், சின்னப்பையன் ஆகியோரது தோட்டத்தில் ரூ.10 லட்சம் மதிப்புள்ள செவ்வாழை, கதளி வாழைகள் சேதமடைந்தன. காராட்சிக்கொரை விவசாயிகள் குப்புராஜ், ராஜன் தோட்டத்தில் குலை தள்ளிய நிலையில் இருந்த கதளி மற்றும் ஜி9 வாழைகள் அடியோடு முறிந்து விழுந்தன.

புங்கார், காராட்சிக்கொரை மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் பயிரிடப்பட்டிருந்த ரூ.45 லட்சம் மதிப்புள்ள வாழைகள் சூறாவளிக் காற்றால் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட தங்களுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வரத்து குறைந்ததால் தர்பூசணி விலை உயர்வு

வறட்சி காரணமாக தர்பூசணிப் பழங்கள் வரத்து குறைந்துவிட்டதால் விலை உயர்ந்து வருகிறது.

தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களுக்கு திண்டிவனம், கடலூர் மாவட்டங்களில் இருந்துதான் தர்பூசணிப் பழங்கள் அதிகமாக விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. வறட்சி காரணமாக இம் மாவட்டங்களில் கடந்த ஆண்டில் பயிரிடப்பட்ட 60 சதவீத இடங்களில், இந்த ஆண்டு தர்பூசணி பயிரிடப்படவில்லை.

இதனால், பழங்கள் வரத்து குறைவாக உள்ளது. கடந்த ஒன்றரை மாதமாக தர்பூசணி விற்பனை நடந்து வருகிறது. முதலில், கிலோவுக்கு ரூ.8 முதல் ரூ.10 (சில்லரை விலை) வரை இருந்த தர்பூசணி, இப்போது ரூ.20-க்கு விற்பனை செய்யப்படுகிறது. திண்டிவனம், கடலூருக்கு

நேரடியாகச் சென்று கொள்முதல் செய்யும் மொத்த வியாபாரிகள், சாலையோர சிறு வியாபாரிகளுக்கு இவற்றை விற்கின்றனர். இதுதவிர, ஈரோடு நேதாஜி மார்க்கெட்டுக்கும் தினமும் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

இதுகுறித்து, ஈரோடு கனி வணிகர்கள் சங்கத் தலைவர் ஆர்.கே.சண்முகவேல் கூறியது:

ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டுக்கு தினமும் 40 முதல் 50 டன் வரை தர்பூசணி வருகின்றன. ஒரு டன் ரூ.10,500 முதல் ரூ.11,000 (மொத்த விலை) வரை விற்பனை செய்கிறோம். முதலில், கிலோவுக்கு ரூ.5 ஆக இருந்த தர்பூசணி இப்போது ரூ.10 முதல் ரூ.11 ஆக விலை உயர்ந்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் இந்த அளவுக்கு விலை உயர்ந்துள்ளது.

சில்லரை வியாபாரிகள் கிலோவுக்கு ரூ.20 வரை விற்பனை செய்கின்றனர். வறட்சி காரணமாக வரத்து குறைந்துவிட்டதால் விலை உயர்ந்துவிட்டது. இன்னும் ஒரு வாரத்தில் மேலும் விலை உயர வாய்ப்புள்ளது என்றார்.

### பவானிசாகர் நீர்மட்டம் 44.13 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 44.13 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 150 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 607 கன அடியும், வாய்க்காலில் 2,000 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 3.17 டி.எம்.சி.

### விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

திருவண்ணாமலையை அடுத்த ஆணாய்பிறந்தான், காவேரியாம்பூண்டி கிராமங்களில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாக்களில், விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

ஆணாய்பிறந்தான் கிராமத்தில் நடைபெற்ற விழாவுக்கு, ஊராட்சித் தலைவர் கே.தருமராஜ் தலைமை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர் தங்கமணி, விதைச்சான்று உதவி இயக்குநர் பேபி பர்வதம், கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரி தியோனிஸ் ஆனந்த் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு அரசின் திட்டங்கள் குறித்து விளக்கிப் பேசினர்.

திருவண்ணாமலை வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு 5 விவசாயிகளுக்கு களை எடுக்கும் கருவி, உயிர் உரம், முழு மானியத்துடன் கூடிய வேளாண் இடுபொருள்களை வழங்கிப் பேசினார்.

முன்னதாக, வேளாண் கண்காட்சி நடைபெற்றது. இவ் விழாவில், வேளாண்மை அலுவலர் எழிலரசு மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் அதிகாரிகள், விவசாயிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்டத்தைச் சேரந்த விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் வரும் 19-ஆம் தேதி நடைபெறுகிறது

சேலம் மாவட்டத்தைச் சேரந்த விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் வரும் 19-ஆம் தேதி நடைபெறுகிறது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வரும் ஏப்ரல் 19-ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டு வேளாண்மை சம்மந்தமான குறைகளை நேரிலும், விண்ணப்பம் மூலமாகவும் தெரிவித்து பயன்பெறலாம் என ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொல்லாபுரம் கிராமத்தில் உழவர் பெருவிழா

அரியலூர் மாவட்டம், கொல்லாபுரம் கிராமத்தில் திங்கள்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

விழாவுக்கு அரியலூர் வேளாண்மை உதவி இயக்குநர் மல்லிகா தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் காந்தி முன்னிலை வகித்தார்.

விழாவில், வேளாண் துறை சார்பில் மண் மாதிரி எடுத்தல், கிரீடு வேளாண் அறிவியல் மையம் சார்பில் நெல் விதை நேர்த்தி செய்தல், தோட்டக் கலை துறை சார்பில் குழித்தட்டு முறையில் நாற்றங்கால் அமைத்தல் போன்ற செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன.கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசிகள் போடப்பட்டன.

விழாவில் வேளாண் இணை இயக்குநர் குணசேகரன் பங்கேற்று, வேளாண்மை துறை சார்ந்த விவசாயிகளுக்கான திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார்.

விழாவில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, தோட்டக் கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கிரீடு வேளாண் அறிவியல் மையம், வருவாய்த் துறை, மீன்வளத் துறை, பட்டு

வளர்ப்புத் துறை, மற்றும் கோத்தாரி சர்க்கரை ஆலையைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்று, தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் குறித்து விளக்கினர்.

### ஏப். 19-ல் விவசாயிகள் குறை தீர் நாள்

கரூர் மாவட்ட ஆட்சியரகத்தில்  விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் ஏப். 19 காலை 10.30-க்கு நடைபெற உள்ளது.

இதில் கரூர் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளைத் தெரிவிக்கலாம். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி வெளியிட்ட செய்திக் குறிப்பில் இதைத் தெரிவித்தார்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 25.34 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 25.34 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு

161 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### வேதாரண்யத்தில் உழவர் பெருவிழா

நாகை மாவட்டம்,வேதாரண்யத்தைச் சேர்ந்த அகஸ்தியம்பள்ளியில் வேளாண்துறை சார்பில் உழவர் பெருவிழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு நகர்மன்றத் தலைவர் மலர்கொடி நமச்சிவாயம் தலைமை வகித்தார். வேதாரண்யம் வேளாண் உதவி இயக்குநர் ந. சந்திரகாசன் முன்னிலை வகிதார்.

வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருள்கள் வழங்கப்பட்டன. விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை உணவு அளிக்கப்பட்டது.

நகர்மன்ற உறுப்பினர் மோகன்,வேளாண் உதவி அலுவலர் வேதரெத்தினம், பிரபு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கர்நாடகம் முழுவதும் பரவலாக பலத்த மழை

கோடை வெப்பத்தைத் தணிக்கும் வகையில், கர்நாடகம் முழுவதும் திங்கள்கிழமை இரவு பலத்த மழை பொழிந்தது.

கடந்த சில நாள்களாக பூங்கா நகரமான பெங்களூர் உள்பட கர்நாடகம் முழுவதும் கோடை வெயில் சுட்டெரித்தது. இதைப் போக்கும் விதமாக திங்கள்கிழமை இரவு பெங்களூர் உள்பட கர்நாடகம் முழுவதும் பரவலாக பலத்த மழை பெய்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்து, சிறிது குளிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து பெங்களூரில் வானிலை ஆய்வு மைய இயக்குனர் வி.எஸ்.பிரகாஷ் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

பெங்களூரில் 23 மி.மீட்டர் அளவு மழை பெய்துள்ளது. பெங்களூர் ஊரகத்தில் 25.5 மி.மீ, ராம்நகர் மாவட்டத்தில் 59 மி.மீட்டரும், கோலார் மாவட்டத்தில் 62.5 மி.மீ, மண்டியா 73 மி.மீ, சாம்ராஜ்நகர் 24.5 மி.மீ, தும்கூரில் 72.5 மி.மீ, மைசூர் 21.5 மி.மீ, ஹாசன் மாவட்டத்தில் 11 மி.மீ மழை பெய்துள்ளது.

சித்ரதுர்கா, கொப்பள், சிக்கமகளூர் மாவட்டங்களில் குறைந்தபட்சமாக 6.5 மி.மீ மழை பெய்துள்ளது. சில மாவட்டங்களில் பலத்த மழை பெய்யாமல், மிதமான மழை பெய்தது என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**17.04.2013 A.M**

---

## ஓமனிலிருந்து 1,327டன் உரம் குடந்தைக்கு வரத்து

கும்பகோணம்: ஓமன் நாட்டிலிருந்து 1,327டன் உரம் கும்பகோணத்திற்கு வந்தடைந்தது. தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் தற்போது நடந்து வரும் கோடை நெல் சாகுபடி மற்றும் மே, ஜனுன் மாதங்களில் தொடங்கவுள்ள முன்பட்ட குறுவை சாகுபடிக்கென தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உரம் விவசாயிகளுக்கு நேரடியாக விற்பனை செய்யப்பட உள்ளது.

இதற்கென ஓமன் நாட்டில் இருந்து கிரிப்கோ றுவன யூரியா 1,327 டன் கப்பல் மூலம் தூத்துக்குடிக்கு அனுப்பப்பட்டது. அங்கிருந்து 21 ரயில் வேகன்கள் மூலம் கும்பகோணம் வந்தது. தஞ்சை கூட்டுறவு விற்பனை மேலாளர் ஜெயக்குமார் மற்றும் அலுவலர்கள் உரத்தை பெற்றுக் கொண்டனர். பின்னர், 150 லாரிகள் மூலம் தஞ்சாவூர், மயிலாடுதுறை, வலங்கைமான், பாபநாசம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் வட்டாரங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு உரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சி மையத்தில் பாரம்பரிய நெல்; வேளாண்மைதுறை இயக்குனர் ஆய்வு

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே ஆதிரெங்கம் கிரியேட் விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் பாரம்பரிய நெல் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி கிரியேட் இயற்கை விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் உள்ள பாரம்பரிய விதைநெல் வங்கியை தமிழக வேளாண்மைத்துறை இயக்குனர் ராஜேந்திரன் பார்வையிட்டார்.

விதை நெல் வங்கியில் உள்ள, 60 நாள் முதல், 180 நாள் வயதுடைய, 63 பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்தும், இதில் வறட்சி வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் தங்கி வளரக்கூடிய ரகம், மருத்துவ குணமுடைய ரகம் என பல விவரங்களை கேட்டறிந்தார்.

நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்த பாரம்பரிய நெல் ரகங்களை மீண்டும் உழவர்களிடையே

நடைமுறைக்கு கொண்டு வந்திருப்பதை கேட்டு பெருமிதம் கொள்வதாக தெரிவித்தார். கிரியேட் விதை வங்கி மூலம் பாரம்பரிய நெல் முறையை உழவர்களுக்கு வழங்கும் விதம் குறித்தும் கேட்டறிந்தார்.

குறிப்பாக, பாரம்பரிய நெல் முறையில் விதை தேர்வு, விதை நேர்த்தி, விதை பாதுகாப்பு குறித்தும், பாரம்பரிய நெல் ரகங்களை அனைத்து உழவர்களுக்கு சாகுபடி செய்ய கிரியேட் எடுத்து வரும் முயற்சி பாராட்டுதலுக்கு உரியது என தெரிவித்தார்.

இயற்கை முறையில் சாகுபடியில் கடைபிடிக்கும் தொழில் நுட்பமான பஞ்சகாவியா, மூலிகை பூச்சி விரட்டி, வெங்காய தாமரையில் இருந்து மண்புழு உரம் தயாரிக்கும் முறை, மீன் அமிலம், அமுத கரைசல் போன்ற இடு பொருட்கள் தயாரிக்கும் முறைகளை நேரில் பார்வையிட்டு செய்முறைகளை கேட்டரிந்தார்.

பாரம்பரியம் நெல் முறைகளை எப்படி விற்பனை செய்கின்றீர்கள்?, டெல்டா மாவட்டத்தில் நெல் உற்பத்தியாளர் கம்பெனி, ஈரோட்டில் மஞ்சள் உற்பத்தியாளர் கம்பெனி, ராமநாதபுரத்தில் மிளகாய், மல்லி உற்பத்தியாளர்கள் கம்பெனி செயல்பாடு குறித்து கேட்டறிந்ததோடு, மார்க்கெட்டிங் குறித்த மேலும் விபரங்களை அறிய வெளியில் சென்று கற்று தெரிந்து கொள்ள தமிழக அரசு உதவி செய்யும்.

சிறந்த விவசாயிகளுக்கு மாநில அளவில் விருது வழங்கி பாராட்டுவது போல் ஒவ்வொரு கிராம அளவிலும், ஒவ்வொரு பயிருக்கும் விவாசாயிகள் தேர்வு செய்து விருது வழங்கப்படும். தமிழக அரசு உழவர் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதை விவாசயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் பண்ணையின் செயல்பாடுகள் குறித்து, விவசாயிகளுக்கு விதை நெல் வழங்கும் பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

ஆய்வின் போது திருவாரூர் மாவட்ட வேளாண்மைத் துறை இணை இயக்குனர் கணேசன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மயில்வாகணன், திருத்துறைப்பூண்டி வேளாண் உதவி இயக்குனர் நடேசன், கிரியேட் விதை வங்கி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### மழைக்காக காத்திருக்கும் விவசாயிகள்

சிங்கம்புணரி:தமிழ்புத்தாண்டு துவங்கிய பிறகு ஏர் இடுவதற்காக,முதல் மழையை,சிங்கம்புணரி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர் .இப்பகுதியில்,சில கிராமங்களில் சித்திரை முதல்நாள் ஏர்

இடுகின்றனர்.சிங்கம்புணரியில்,ஒவ்வொரு ஆண்டும் தமிழ் புத்தாண்டு,சித்திரை மாதம் பிறந்த பிறகு,முதல் மழைபெய்தவுடன், விவசாயிகள் ஊர் பொது இடத்தில் கூடி, கிராமதெய்வம் சேவுகப்பெருமாள் ஐயனாரை வழிபட்டவுடன். விவசாய பணிகளை துவக்கும் அடையாளமாக, தங்களது, நஞ்சை,புஞ்சை நிலங்களில் ஏர் பூட்டி உழவு செய்கின்றனர். மழை எப்போது பெய்யும் என விவசாயிகள் ஆவலோடு காத்திருக்கின்றனர்.

## நெல்லையில் பலத்த காற்று வாழைகள் சாய்ந்தன

திருநெல்வேலி:நெல்லை பகுதியில் பலத்த காற்று வீசியதில் வாழைகள் சாய்ந்தன.
நெல்லை சுற்றுப்பகுதிகளில் நேற்றுமுன்தினம் கோடை மழை பெய்தது. மழை பெய்த போது இடி, மின்னலுடன் காற்று பலமாக வீசியது. காற்றின் வேகத்திற்கு தாக்குப்பிடிக்க இயலாமல் மரங்கள் சாய்ந்தன. நெல்லை அருகே விளாகம், கருப்பந்துறை, பாடகசாலை, குன்னத்தூர், திருவேங்கடநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த வாழைகள் சாய்ந்தன. களக்காடு அருகே கோயிலம்மாள்புரத்தில் அதிக அளவில் வாழைகள் சாய்ந்துள்ளன. வாழை நன்கு திரட்சியாக வளர்ந்து பலன் அளிக்கவிருந்த காலக்கட்டத்தில் காற்றில் சாய்ந்ததால் விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சாய்ந்த வாழைகளுக்கு அரசு நிவாரணம் அளிக்க வேண்டும் என விவசாயிகள் கப்றுகின்றனர்.

பா.ஜ., கோரிக்கை

நெல்லை கிழக்கு மாவட்ட பா.ஜ., விவசாய அணி செயற்கு' உறுப்பினர் முத்துக்குமார் வெளியிட்ட அறிக்கையில், “சுகளக்காடு, சேரன்மகாதேவி, வள்ளியூர், நான்குநேரி யூனியன்களில் சப்றைக்காற்றில் 8 லட்சம் வாழைகள் சேதம் அடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு வாழைக்கு 200 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்க வேண்டும்சு என வலியுறுத்தியுள்ளார்.

## மீன் பண்ணை அமைக்க 50 சதவீத மானியம் விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், அரசின், 50 சதவீத மானியத்துடன் மீன்பண்ணை அமைக்க விரும்பும், 25 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாக, கலெக்டர் சண்முகம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
மீன்வளத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியத்தில் மீன் பண்ணைகள் அமைத்தல், மீன்குஞ்சுகள் வளர்த்தல் ஆகியவற்றுக்கு

தகுதியான விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் ஈரோடு மாவட்டத்தில், 25 விவசாயிகளுக்கு மீன் குஞ்சுகள் வளர்ப்பு மற்றும் மீன் பண்ணைகள் அமைக்க அரசு, 50 சதவீத மானியம் வழங்க உள்ளது.

மீன் பண்ணை அமைக்க, 2,500 சதுர மீட்டர் பரப்பில், தண்ணீர் வசதி உள்ள குட்டைகள் வைத்திருக்கும் விவசாயிகள், மீன் குஞ்சுகள் வளர்க்கவும் விண்ணப்பிக்கலாம். ஒரு மீன் பண்ணை அமைக்க, 5,000 ரூபாயும், மீன்களுக்கான தீவனமாக, 1,500 கிலோவுக்கு, 37 ஆயிரத்து, 500 ரூபாயும், மீன்கள் வளர்ந்த பின், அவற்றை விற்பனை செய்வதற்காக, 2,000 ரூபாயும் என மொத்தம், 46 ஆயிரம் ரூபாய் செலவாகும்.

மீன்பண்ணை அமைக்கும் செலவீனத்தில், 50 சதவீத மானியமாக அரசு வழங்குவதால், 23 ஆயிரம் ரூபாய் மட்டுமே, மீன்பண்ணை அமைக்கும் விவசாயிக்கு செலவாகிறது. இத்திட்டத்தின் கீழ், பண்ணைகள் அமைக்க தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு, இரண்டு நாள் பயிற்சிக்கான உதவித் தொகையும் அரசே வழங்குகிறது. பயிற்சி முகாமில், மீன் வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கங்கள், நேரடி கள ஆய்வு பணிகள் மேற்கொண்டு உரிய விவரங்களை விவசாயிகள் நேரில் பார்த்து அறிந்து கொள்வதற்கும், ஈரோடு மாவட்ட மீன் வளத்துறையின் சார்பில் பயிற்களும், கள ஆய்வுகளும் நடத்தப்படுகிறது.

எனவே, ஈரோடு மாவட்டத்தில், 2,500 சதுர மீட்டர் பரப்பளவில், நீர் வசதி கொண்ட குட்டைகளை வைத்திருக்கும் விவசாயிகள், மீன் பண்ணைகள் அமைத்து பயன்பெறலாம். பண்ணைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள், பெருந்துறை மெயின் ரோட்டில் உள்ள மீன்வளத்துறை உதவி இயக்குனர் (உள்நாட்டு மீன்வளர்ப்பு) அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

தகுதியான, 25 விவசாயிகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, அரசின் மானியமும், உதவிதொகையுடன் கூடிய பயிற்சியும் அளிக்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வறட்சியில் எஞ்சிய தென்னை மரங்கள் கரையானுக்கு இரையாகும் பரிதாபம்

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், நெடுஞ்சாலைக்கு சொந்தமான தென்னை மரங்கள், கரையான் அரிப்பால் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும், கடந்த ஓராண்டாக, வறட்சி நிலவுவதால், சென்னை தவிர்த்து, 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அரசு அறிவித்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில்

பல்லாயிரக்கணக்கான தென்னை, பனை மரங்கள் வறட்சியால் அழிந்தன. இதனால், தென்னை, பனை விவசாயிகள் பல லட்ச ரூபாய் நஷ்டம் அடைந்தனர்.

இந்நிலையில், எஞ்சிய வறட்சியில் எஞ்சிய நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள தென்னை மரங்களும், விவசாய தோட்டத்தில் உள்ள தென்னை மரங்களையும் கரையான் அரித்து வருவதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர். எஞ்சிய மரங்களை கரையானிடம் இருந்து காக்க, விவசாயிகள் போராடி வருகின்றனர்.

நெடுஞ்சாலைப் பகுதியில் உள்ள, புளியமரம், தென்னை மரம், புங்கமரம் ஆகிய மரங்கள் கரையானுக்கு இரையாகி வருகிறது. ஈரோடு மாவட்டத்தில், காவிரி ஆறு, காலிங்கராயன் வாய்க்கால், கீழ்பவானி வாய்க்கால் பகுதிகளை ஒட்டிய நெடுஞ்சாலைகளில், அத்துறையினரால் ஏராளமான தென்னைமரங்கள் பராமரிக்கப்பட்டு வந்தது.

வறட்சியால் நெடுஞ்சாலைகளில் பராமரிக்கப்பட்ட மரங்கள் பலவும் பட்டுபோய் காணப்படுகிறது. இந்நிலையில், நெடுஞ்சாலை மரங்களில் கரையான் அரிப்பு அதிகமாக இருப்பதால், வறட்சியில் எஞ்சிய மரங்களும் அழியும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் நிலவும் வறட்சியால், தென்னை, பனை மரங்கள் முற்றிலும் அழிந்தது. மாவட்டத்தின் ஏதோ ஒரு மூலையில் மட்டும், வறட்சியில் எஞ்சிய தென்னை, பனை மரங்கள் காணப்படுகிறது. எஞ்சிய மரங்களுக்கும் ஆபத்தாக, கரையான் தொல்லை அதிகரித்துள்ளது. கரையான் அரிப்பை தடுக்க, சுண்ணாம்பு பூச்சு பூச வேண்டும்.

நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள மரங்களை அதிகாரிகள் கண்டுகொள்ளாததால், பல மாவட்டத்தில் உள்ள நெடுஞ்சாலை மரங்கள் அழிந்தே போயின. இதனால், நிற்க கூட நிழலின்றி, வாகன ஓட்டிகளும், பயணிகளும் அவதிப்படுகின்றனர். எனவே, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் போர்க்கால நடவடிக்கை எடுத்து, எஞ்சிய மரங்களையாவது காப்பாற்ற வேண்டும், என்றனர்.

## வறண்டு போன காலிங்கராயன் வாய்க்கால் ஊற்று கிணறு அமைத்து விவசாயிகள் சாகுபடி

ஈரோடு: காலிங்கராயன் வாய்க்கால் வறண்டது கிடப்பதால், விவசாயிகள் ஊற்றுக் கிணறுகள் பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்து வருகின்றனர்.

ஈரோட்டில், காலிங்கராயன் வாய்க்கால் மூலமாக, 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள்

பாசன வசதியை பெறுகின்றன. நெல், மஞ்சள், க ரும்பு, வாழை உள்ளிட்ட வை பயிரிடப்படுகின்றன. ஆண்டுதோறும் ஆகஸ்ட், 15ம் தேதியன்று காலிங்கராயனில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.

ஆனால், சாயம், தோல், சாக்கடை கழிவுநீர் கலப்பதால், வாய்க்காலில் தண்ணீர் மாசுபட்டு வந்தது. தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால், காலிங்கராயன் வாய்க்கால் வறண்டு கிடக்கிறது. இந்த வாய்க்கால் தண்ணீரைப் பயன்படுத்தி, பயிர் சாகுபடி செய்து வந்த விவாசாயிகள், ஏற்கனவே பயிரிட்ட பயிர்களை காக்க முடியாமல், அவதிப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஒரு சில விவசாயிகள், காவிரி ஆற்றின் நீரோட்டம் அதிகம் உள்ள இடத்தில், ஊற்றுக் கிணறுகளை தோண்டி வருகின்றனர். ஏற்கனவே, ஊற்றுக்கிணறு மூலம் விவசாயம் செய்து வந்த விவசாயிகள், டீசல் எஞ்ஜின் மூலம், தண்ணீரை ஊற்றுக் கிணற்றில் இருந்து எடுத்து பயிர் சாகுபடி செய்கின்றனர்.

காவிரி ஆறு, காலிங்கராயன் வாய்க்கால்களில் தண்ணீர் வற்றிக் கிடக்கும் நிலையில், விவசாயிகள் ஊற்றுக் கிணறு மூலம், பயிர்களை காப்பாற்றி வருகின்றனர்.

இதுகுறித்து ஊற்றுக்கிணறு அமைத்து பயிர் சாகுபடி செய்து வரும் மலையம்பாளையம் விவசாயி செல்லகுமார் கூறியதாவது:

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியால், தண்ணீர் இன்றி பயிர்கள், வாழை, மஞ்சள் ஆகியவை கருகி வருகின்றன. பயிரிட்ட பயிர்களை கருகவிடாமல், ஊற்றுக் கிணறுகளை தோண்டி, பயிர்களை காப்பாற்றி வருகிறோம். தொடர்ந்து மழை பெய்யாமல் இருந்தால், ஊற்றுக் கிணறும் வற்றிவிடும். கடந்த பல ஆண்டுகளுக்கு முன், பெரும் வெள்ளம் ஏற்பட்ட போது, வாய்க்காலை ஒட்டிய பகுதிகளில், மணல் திட்டுகள் ஏற்பட்டுள்ளது. அதனால், பத்து அடி ஆழம் தோண்டினாலே, ஊற்று நீர் உற்பத்தியாகிவிடும். முழு விவாசயத்துக்கும் பயன்படுத்தாவிட்டாலும், ஏற்கனவே பயிரிட்ட வாழை, மஞ்சள் பயிர்களை காப்பாற்ற முயற்சி செய்து வருகிறோம், என்றார்.

## கோழிக்கொண்டை விலை அதிகரிப்பு வாழை பயிரிட்ட விவசாயிகள் "குஷி'

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் கோழிக்கொண்டை பூ விலை அதிகரித்ததால், வாழை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சத்தியமங்கலம் பகுதியில் விவசாயிகள் வாழை, கரும்பு, புகையிலை, மஞ்சள் உள்ளிட்ட வருட பயிர்கள் நடவு செய்துள்ளனர். இதுபோன்ற ஆண்டு பயிர்களில், ஆண்டு இறுதியில் வருமானம் கிடைப்பதால், இடையில் ஏற்படும் செலவுக்கு விவசாயிகள் சிரமப்படுகின்றனர். ஆண்டு

முழுவதும் நடப்பட்ட பயிருக்கு உரம் மற்றும் பூச்சி மருந்து போன்றவைகள் தெளிக்கவும், பயிரை பாதுகாக்கவும் ஆகும் பராமரிப்பு செலவுக்கு, கடன் பெறும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர்.

இதனால், ஆண்டு பயிரில் இருந்து தினமும் வருமானம் கொடுக்கும் மல்லிகை பூ மற்றும் காய்கறிகள் பயிரிட விவசாயிகள் துவங்கி உள்ளனர். இந்நிலையில் ஆண்டு பயிர் பாராமரிப்பு செலவுகளை ஈடுகட்ட, தற்போது விவசாயத்தில் புதிய யுக்திகளை விவசாயிகள் கடைபிடிக்கின்றனர்.

வாழை வயலில் கோழிக்கொண்டை பூ ஊடுபயிராக நட்டுள்ளனர். இதனால் வாழை வயலில் புற்கள் முளைப்பதில்லை. இதனால் பராமரிப்பு செலவு குறைகிறது. இது மட்டுமின்றி செண்டுமல்லி நடப்பட்ட, 45வது நாளில் பலன் கொடுக்க தொடங்கி விடுகிறது. சாதாரண நாளில் ஒரு கிலோ கோழிக்கொண்டை, 10 ரூபாய் வரை விற்பனையாகும். சீசன் நேரத்தில் ஒரு கிலோ, 100 ரூபாய் வரை விற்பனையாகிறது.

தற்போது கடும் வறட்சியால் கோழிக்கொண்டை பூ உற்பத்தி குறைந்ததால் இதன் விலை அதிகரித்துள்ளது. கடந்த ஒரு வாரமாக சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ கோழிக்கொண்டை பூ, 90 முதல், 110 ரூபாய் வரை விற்பனையாகிறது.

இதனால் விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் கிடைக்கிறது. கோழிக்கொண்டை பூவில் கிடைக்கும் வருமானம், வாழையின் பரமாரிப்பு செலவை சரிக்கட்டுவதால், வாழையில் கிடைக்கும் வருமானம் மொத்தமாக சேமிக்க முடிகிறது, என வாழை விவசாயிகள் கூறுகின்றனர்.

## அதிகரிக்கும் வறட்சி: தேயிலை வரத்து குறைவு

மஞ்சூர் : வறட்சி அதிகரித்து வருவதால், தேயிலை வரத்து குறைந்து வருகிறது.

மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது, கடந்தாண்டில் போதுமான மழை இல்லாததால் நிலையில், கடும் பனி பொழிவால் தேயிலை மகசூல் குறைந்தது. நடப்பாண்டில் மஞ்சூர் பகுதிகளில் ஓரளவுக்கு மழை பெய்தாலும், இத்தலார் சுற்றுவட்டார பகுதிகளில் எதிர்பார்த்த அளவு மழை இல்லை.

இதனால், தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது.

தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து வெகுவாக குறைந்ததால், இத்தலாரில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் குறைந்தளவே பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதே நிலை நீடித்தால் தொழிலாளர்கள் வேலையிழக்கும் அபாயமும் ஏற்படும். இந்த சூழ்நிலையில், இத்தலார் சுற்றுப்புற கிராமங்களில், மழை வேண்டி சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## உழவர்பெருவிழா

கோத்தகிரி : கோத்தகிரி நடுஹட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பையங்கி கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர் ராமன் பேசினார். இதில், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கால்நடை துறை, உபாசி (கே.வி.கே), வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை துறை, விதைச்சான்று துறை, ஆவின் ஆகிய துறைகளில் இருந்து அலுவலர்கள் பங்கேற்று, விவசாயிகளுக்கு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தனர்.

விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இதில், பையங்கி சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த 300 விவசாயிகள் பங்கேற் றனர். பையங்கி ஊர் தலைவர் நடராஜ் தலைமை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் மணி நன்றி கூறினார்.

## குறைந்த செலவில் எள் சாகுபடி: கூனன்பட்டறை விவசாயி சாதனை

திருக்கழுக்குன்றம்: திருக்கழுக்குன்றம் அடுத்த மோசிவாக்கம் ஊராட்சிக்குட்பட்ட, கூனன்பட்டறை கிராமத்தில், குறைந்த செலவில் எள் பயிரை சாகுபடி செய்து, விவசாயி அதிக மகசூல் பெற்று வருகின்றார்.

இதுகுறித்து, விவசாயி முனுசாமி கூறியதாவது: எனக்கு சொந்தமாக, 2 ஏக்கர் நிலம் உள்ளது. இதில், ஒரு ஏக்கர் நிலத்தில் எள் பயிரிட்டுள்ளேன். இதற்காக, நிலத்தை முதலில் டிராக்டர் மற்றும் பவர்டில்லர் இயந் திரம் மூலம் நன்கு உழுது, எள்ளை விதைத்தேன். ஒன்பதாவது நாளில் விதைகள் முளைக்க துவங்கின. 15 மற்றும் 22 நாளில் தண்ணீர் பாய்ச்சினேன். மொத்தத்தில் நான்கு தண்ணீர் பாய்ச்சினால், போதுமானதாக இருக்கும். பின், 40வது நாளில் களை எடுக்க வேண்டும்.

இலை புழுக்கள்

75வது நாளில் செடிகளில் மொட்டுக்கள் எடுக்க ஆரம்பிக்கும். இச்சமயத்தில், இலை புழுக்களிடமிருந்து மொட்டுக்களை காப்பாற்றுவதற்காக, ஒரு ஏக்கருக்கு அரை மூட்டை காம்ப்ளக்ஸ் மற்றும் யூரியா ஆகிய இரண்டையும் கலந்து, பயிர்களுக்கு போட்டேன். பின், 80வது நாளில் எள் காய் காய்க்கும். 90வது நாளில் அறுவடைக்கு தயாராகிவிடும். அறுவடை செய்த எள்

செடிகளை, கட்டுகளாக கட்டி மூன்று நாட்கள் காயவைப்போம். இதில், செடிகளில் இருந்த எள் காய்கள் வெடிக்கும். நான்காவது நாள், எள் செடிகளை சிறிய கட்டுகளாக கட்டி, தரையில் மெல்ல தட்டினால், காய்களில் உள்ள எள் கீழே கொட்டும். இவ்வாறு செய்வதன், மூலம் ஏக்கருக்கு, 85 கிலோ கொண்ட நான்கு மூட்டைகள் எள் கிடைக்கும்.

ஒரு சிலர் மட்டும்

ஒரு மூட்டை, சந்தையில் 3,600 முதல் 4,000 வரை விற்பனையாகும். இதனால், ஏக்கருக்கு அனைத்து செலவுகளும் போக, 8 முதல் 10 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும். மேலும், எள் பயிரின் இடையே ஊடு பயிராக, உளுந்தையும் பயிரிடலாம். இதனால், ஒரே செலவில் கூடுதலாக நமக்கு மேலும் லாபம் கிடைக்கும். தற்போது, எள் பயிரிடுவதில் வேலை பளு அதிகம் என்பதாலும், விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைக்காததாலும், எள் பயிரிடுவதை திருக்கழுக்குன்றம் பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தவிர்க்கின்றனர். ஒரு சிலர் விவசாயிகள் மட்டும், வீட்டு தேவைகளுக்காக எள்ளை பயிரிட்டு வருகின்றனர். இவ்வாறு, விவசாயி முனுசாமி கூறினார்.

## புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்த விவசாயிகள் தயக்கம்

காஞ்சிபுரம்: தண்ணீர் பற்றாக்குறையை சமாளித்து, கூடுதல் சாகுபடியை பெறும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட, திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை, விவசாயிகள் பயன்படு த்த தயங்கி வருவதால், நடப்பாண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில், நெல் உற்பத்தி கடுமையாக சரிந்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில், மொத்த சாகுபடி பரப்பு 4.50 லட்சம் ஹெக்டர். பொது பணித்துறை கட்டுப் பாட்டில் 912 ஏரிகளும், ஒன்றிய நிர்வாக கட்டுப்பாட்டில் 1,002 ஏரிகளும் உள்ளன. இவற்றில் இருந்து, 3 லட்சம் ஹெக்டர் நிலங்கள் பாசன வசதி பெற்று, விவசாயம் நடைபெற்று வந்தது. இதனால், நெல் உற்பத்தியில், காஞ்சிபுரம் மாவட்டம் இரண்டாமிடத்தில் இருந்தது.

சமீப காலமாக, பருவ மழை பொய்ப்பு, நிலத்தடி நீர் மட்டம் குறைவு உள்ளிட்ட காரணங்களால், சாகுபடி பரப்பு, 4.50 லட்சம் ஹெக்டரில் இருந்து, 1.90 லட்சம் ஹெக்டராக குறைந்துவிட்டது. இதனால், நவரை பருவத்தில், நெல் உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. வேளாண் துறை சார்பில், விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு, விவசாயம் செழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக, அதிக மகசூல் ஈட்டும் வகையில், திருந்திய நெல் சாகுபடி நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், பல விவசாயிகள் இதில் ஈடுபட தயங்கி வருகின்றனர்.

இதுகுறித்து, கோவிந்தவாடியை சேர்ந்த நாகராஜ் கூறுகையில், ""திருந்திய நெல் சாகுபடி தொழில்

நுட்பத்தை பயன்படுத்தி இயந்திர நடவு செய்தால், களைக் கூலி அதிகமாக உள்ளது. அதை ஈடுகட்டும் அளவிற்கு இம்முறையில் மகசூல் இல்லை. அதே நுட்பத்தை பயன்படுத்தி, கை நடவு செய்ய நினைத்தால் கூலி ஆட்கள் ஈடு கொடுப்பதில்லை. இதனால், விளைச்சல் குறைவாக இருந்தாலும் பரவாயில்லை என, நினைத்து, சாதாரண நடவு முறையையே விவசாயிகள் கையாளுகின்றனர்," என்றார். இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""பருவ நிலை மாற்றம் காரணமாக, விவசாயம் வெகுவாக பாதிக்கப்படுகிறது. திருந்திய நெல் சாகுபடியில், விவசாய உற்பத்தி செய்யும் நுட்பம் நடைமுறை படுத்தப்படுகிறது. இம்முறையில் பயிரிட பெரும்பாலான விவசாயிகள் முன் வருவதில்லை. உற்பத்தி குறைந்து விடும் என, அச்சப்படுகின்றனர்.

அச்சத்தை தவிர்க்க, புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, அச்சிறுப்பாக்கம், லத்தூர், ஆகிய வட்டாரங்களில், தலா பத்து கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, பசுமை கிராமம் என்ற பெயரில், எட்டு துறைகள் ஒருங்கிணைந்து நெல் பயிரிடப்படுகிறது. இக்கிராமங்களை விவசாயிகள் பார்வையிட்டால், விவசாய யுக்திகளை தெரிந்து கொள்ளலாம். அந்த தொழில் நுட்பங்களை, பிற விவசாயிகள் செயல்படுத்தினால், குறைந்த பரப்பிலும் நெல் உற்பத்தியை பெருக்கலாம்," என்றார்.

## கரும்பு தோட்டத்தை சூறையாடிய யானைகள்; மக்கள் பெரும் தவிப்பு

திருவண்ணாமலை: பத்து ஏக்கர் கரும்பு தோட்டத்தை யானைகள் கூட்டம் சூறையாடியது. இதனால், விடிய, விடிய அப்பகுதி மக்கள் வீதியில் பரிதவித்தனர்.
தர்மபுரி மாவட்ட எல்லையில் இருந்து நேற்று முன்தினம் இரவு திருவண்ணாமலை மாவட்ட எல்லையான செங்கம் பகுதிக்குள் ஆறு யானைகள் புகுந்தது. செங்கம் அடுத்த தாழையூத்து பகுதியில் மூன்று மாடுகளை தாக்கி கொன்றன. பின்னர் இரவோடு இரவாக சாத்தனூர் அணைக்கு யானைகள் வந்தன. தண்ணீருக்காக அலைமோதும் யானைகளுக்கு சாத்தனூர் அணை தாகம் தீர்க்கும் இடமாக அமைந்திருக்கிறது.
நேற்று முன்தினம் இரவு முதல் தொடர்ந்து சாத்தனூர் அணை காப்புகாடு பகுதிகளில் முகாமிட்டுள்ளன. அணையை சுற்றியுள்ள தண்டராம்பட்டு, ரெட்டியார்பாளையம், துள்ளுக்குட்டிபாளையம், வீரணம் உள்ளிட்ட கிராம மக்கள் இரவு முழுவதும் தூக்கத்தை தொலைத்து விடிய, விடிய வீதிகளில் தஞ்சமடைந்தனர்.
சாத்தனூர் அணை பிக்கப்டேம் பகுதியில் இருந்து ரெட்டியார்பாளையம் வழியாக தானிப்பாடி நோக்கி நேற்று முன்தினம் இரவு சென்ற யானைகள் அங்கு பயிரிடப்பட்டிருந்த கரும்பு தோட்டங்களை துவம்சம் செய்தது.
இதில், பத்து ஏக்கர் கரும்பு பயிர்கள் சேதமானது. இதையறிந்த ரெட்டியார்பாளையம் கிராம

மக்கள் சிலர் தீப்பந்தங்களுடன் விடிய, விடிய யானைகளை சின்னியம்பேட்டை காப்பு காட்டு பகுதிக்கு விரட்டினர்.

தற்போது ,காப்பு காட்டு பகுதியில் உள்ள யானைகள் மீண்டும் ஊருக்குள் வந்துவிடுமோ என்ற பீதியில் கிராம மக்கள் உள்ளனர். தகவலறிந்த வனத்துறையினர் விரைந்து சென்று யானைகளை விழுப்புரம் மாவட்ட எல்லையான கல்வராயன் மலை பகுதிக்கு விரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனால், அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## விழுப்புரத்தில் 19ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு

விழுப்புரம் : விழுப்புரத்தில் வரும் 19ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் நடக்கிறது. விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் வரும் 19ம் தேதி காலை 11 மணிக்கு நடக் கிறது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்குகிறார்.

கூட்டத்தில், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்துக் கொண்டு கோரிக்கைகளை மனுவாக வழங்கி பயன்பெறலாம்.

## கண்டமங்கலம் ஒன்றியத்தில் உழவர் பெரு விழா துவக்கம்

கண்டமங்கலம் : கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் "உழவர் பெருவிழாவை' ஜானகிராமன் எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார்.கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 54 வருவாய் கிராமங்களில், தமிழக அரசு வேளாண் துறையின் இந்த ஆண்டுக்கான "உழவர் பெருவிழா' வரும் மே 20ம் தேதி வரை நடக்க உள்ளது. இதன் துவக்க விழா கண்டமங்கலம் ஜீவா திருமண மண்டபத்தில் நடந்தது.

விழாவிற்கு கண்டமங்கலம் ஊராட்சி தலைவர் தமிழ்மணி தலைமை தாங்கினார். ஒன்றிய விவசாயிகள் ஆலோசனைக்குழு தலைவர் வைத்தியலிங்கம், உதவி வேளாண் அலுவலர் ராதிகா ஆகியோர் வரவேற்றர். கண்டமங்கலம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சம்பத், வட்டார வேளாண்மை அலுவலர் அரிக்கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய சேர்மன் சர்மிளாதேவி நெடுஞ்செழியன், ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் ராமதாஸ், முன்னாள் ஒன்றிய செயலாளர் கண்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

உதவி வேளாண் அலுவலர் அந்தோணிசாமி, வேளாண் பொறியியல்துறை உதவி பொறியாளர்கள் ராஜேந்திரன், கிருஷ்ணமூர்த்தி, குமாரகணேஷ், தோட்டக்கலை உதவி இயக்குனர் ராசு, துணை வேளாண் அலுவலர் ராஜதுரை, உதவி விதை அலுவலர்கள் தென்னரசு, ஜெயமூர்த்தி, வட்டார வேளாண் அலுவலர் அரிக்கிருக்கிருஷ்ணன், உதவிப்பொறியாளர் ராஜேந்திரன், உதவி வேளாண் அலுவலர் அந்தோணிசாமி மற்றும் சதாஸ்ரீ, விமலா ஆகியோர் பேசினர்.உதவி வேளாண் அலுவலர் ராதிகா நன்றி கூறினார்.

## பருத்தி மூட்டை தேக்கம் ஏலம் ஒத்திவைப்பு

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பருத்தி மூட்டைகள் இருப்பு உள்ளதால், இந்த வாரம் பருத்தி ஏலம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம்தோறும் பருத்தி, மஞ்சள், தானியம், எண்ணெய் வித்துகள் ஏலம் நடந்து வருகிறது. ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதிகளில் இருந்து மட்டுமின்றி, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், சங்கராபுரம், திட்டக்குடி, திருவண்ணாமலை, பெரம்பலூர் உள்ளிட்ட பகுதி விவசாயிகள், அதிகளவில் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

ஆத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சி, கும்பகோணம் பகுதியை சேர்ந்த, 40க்கும் மேற்பட்ட பருத்தி வியாபாரிகள் கலந்து கொண்டு, பருத்தி மூட்டைகளை ஏலத்துக்கு எடுக்கின்றனர்.

ஒவ்வொரு வாரமும், 20 ஆயிரம் மூட்டைகள் அடுக்கி வைக்க இடமின்றி, அலுவலகம் வரை வைத்து ஏலம் நடத்தப்படுகிறது.

தற்போது, எட்டு கோடி ரூபாய் மதிப்பிலான, 45 ஆயிரம் பருத்தி மூட்டைக்கு மேல், கூட்டுறவு சங்க வளாக குடோன்களில் அடுக்கி வைத்துள்ளனர். இதனால், கடந்த, 15ம் தேதி நடக்க இருந்த பருத்தி ஏலம் வரும், 22ம் தேதி நடக்கும் என்று, கூட்டுறவு சங்க தனி அலுவலர் அறிவித்துள்ளார்.

## அறுவடை மிகுதியால் வாழை விலை சரிவு

ப.வேலூர்: உற்பத்தி மிகுதி காரணமாக, வாழை விலை, ப.வேலூர் தினசரி மார்க்கெட்டில் வெகுவாக சரிந்துள்ளது. விலை சரிவால், வாழை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ப.வேலூர் மற்றும் ஜேடர்பாளையம், சோழசிராமணி, பாண்டமங்கலம், நன்செய் இடையாறு போன்ற கிராமங்களில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. பூவன், ரத்தாளி, மொந்தன், ராஜ வாழை போன்ற ரகம் அங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

அங்கு உற்பத்தி செய்யப்படும் வாழை, ப.வேலூர் பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள தினசரி வாழை மார்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

கடந்த வாரத்தைக் விட, இந்த வாரம் வாழை விலை வெகுவாக சரிந்துள்ளது. அதன்படி, 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு தார் வாழை, 100 ரூபாயாகவும், 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ரஸ்தாளி வாழை, 300 ரூபாயாகவும், நான்கு ரூபாய் வீதம் விற்பனை செய்யப்பட்டு வந்த மொந்தன் வாழை, இரண்டு ரூபாயாகவும் விலை சரிந்துள்ளது. இது வாழை விவசாயிகள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:

கடும் வெயில் காரணமாக, மரத்தில் உள்ள வாழைத்தார் வாடி முறிந்து விழுகிறது. அதன்காரணமாக, வாழைதார்களை அதிகளவில் அறுவடை செய்யத் துவங்கியுள்ளனர். வரத்து அதிகம் காரணமாக, வாழை விலை சரிந்துள்ளது. பண்டிகை சீஸன் சமயத்தில் வாழைக்கு நல்ல விலை கிடைக்கும், என்றனர்.

# விவசாய மலர்

**சின்னச்சின்ன செய்திகள்**



**குங்குமப்பூ:**

ஒரு வாசனைப் பொருள் என்றாலும் நமது வீடுகளில் இதைப்பற்றி பேச்சு வருவதென்றால் வீட்டுப் பெண்கள் கர்ப்பமாக இருக்க வேண்டும். பிறக்கப்போகும் குழந்தை நல்ல நிறத்துடன் இருக்க வேண்டும் என்பதற்காக ஆயுர்வேத மருந்துக்கடைகளில் குங்குமப்பூ வாங்கச் செல்வோம். இயற்கையின் படைப்பில் இதுவும் ஒரு விவசாயப் பயிர்தான். அதிக விலைமதிப்பும் குறைந்த அளவில் உற்பத்தியும் இருக்கும். காஷ்மீருக்கு மட்டுமே சொந்தமான பணப்பயிராகும். காஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் பாம்பூர் பகுதியில்தான் அதிக அளவில் விவசாயம் செய்யப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 1600 முதல் 1750 மீட்டர் உயரத்தில் வண்டல்மண் படிந்த பகுதிகளில்தான் குங்குமப்பூ பயிராகிறது.

கிழங்குகளைப் பயன்படுத்தியே பயிர்பெருக்கம் நடைபெறுகிறது. சுமார் 15 செ.மீ. விட்டமுள்ள கிழங்குகளின் மேலே உள்ள ஒருவித திசு போன்ற திரையை அகற்றியபிறகு நடுவதற்கு பயன்படுத்துகின்றனர். ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் இந்த கிழங்குகளை 15-20 செ.மீ. ஆழத்தில் நடவேண்டும். முளைத்துவரும் பயிர் அதே நிலத்தில் 9 அல்லது 10 வருடங்களுக்கு தொடர்கிறது.

குங்குமப்பூவின் சூல்முடியை உலர்த்தினால் கிடைப்பதே வணிக ரீதியில் பயன்படுத்தப்படும் குங்குமப்பூ. குங்குமப்பூவில் நீளமான மூன்று அடர் சிவப்பு நிறத்திலான நூல் போன்றதும் மஞ்சள் நிற வால் பகுதியுடன் கூடிய அமைப்பு உள்ளதைக் காணலாம். இந்த சிவப்பான பகுதியே குங்குமப்பூவாகும். குங்குமப்பூக்களை அறுவடை செய்யும் நேரம் அதிகாலையில் துவங்குகிறது. சேகரிக்கப்பட்ட சூல்முடிகள் வெதுவெதுப்பான ஈரப்பதமற்ற அறைகளில் வைத்து

உலர்த்தப்படுகிறது. நன்கு உலர்ந்ததும் வெளிச்சமோ ஈரப்பதமோ படாத வகையில் சேமிக்கப்படுகிறது. ஒரு கிலோ குங்குமப்பூவிற்கு 1,50,000 பூக்களை அறுவடை செய்ய வேண்டும். **(தகவல்: பாலசந்திரன் ஹெக்டே, சிர்சி, கர்நாடகா)**

**தர்பூசணி சாகுபடி:**

தர்பூசணியில் அதிக காய்கள் பிடிக்க... ஆண், பெண் பூ அல்லது இருபால் பூக்களும் ஒரே செடியில் இருக்கும். காய்பிடிக்கும் தன்மை இருபால் அல்லது பெண்பூக்களுக்குத்தான் உண்டு. எனவே பெண்பூக்களின் எண்ணிக்கை கூடினால் காய் பிடிக்கும் தன்மையைக் கூட்டி விளைச்சலைப் பெருக்கலாம். தர்பூசணியின் இரண்டு இலை பருவத்தின் போது "எத்ரல்' என்ற வளர் ஊக்கியினை 2.5 மி.லி. என்ற அளவில் 10 லிட்டர் நீரில் கலந்து ஒருவார இடைவெளியில் மூன்று முறை தெளிப்பதன் மூலம் காய்பிடிப்பு திறனை 5-7 சதவீதம் அதிகரிக்கலாம். இத்துடன் பயிர் முளைத்த 40ம் நாள் முதல் ஒரு வார இடைவெளியில் மூன்று முறை 13-0-45 மற்றும் 0-0-50 போன்ற நீரில் கரையும் உரங்களை தலா 5 கிராம் என்ற வகையில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் தர்பூசணி பழத்தின் தரத்தையும் சுவையையும் கூட்டுவதோடு மகசூலை 10-14 சதவீதம் வரை அதிகரிக்க முடியும்.

100 கிராம் தர்பூசணி பழத்தில் 92 சதவீதம் நீர்ச்சத்து, 0.2 சதம் புரதச்சத்து, 0.3 சதம் தாது உப்புக்கள், 7 சதம் கார்போஹைட்ரேட் சத்துக்கள் உள்ளன. தர்பூசணிப் பழத்திலுள்ள லைக்கோபீன் என்ற நிறமி புற்று நோயைத் தடுக்க உதவுகிறது. இந்த காரணங்களால் ஆண்டு முழுவதும் தர்பூசணியின் தேவை அதிகரித்து வருகிறது.

**அசோலா:**

சிறு சிறு இலைகளையும் துல்லியமான வேர்களையும் கொண்ட நீரில் மிதந்துவரும் பெரணி வகையைச் சேர்ந்த ஒரு தாவரம். நெல் வயல்களில் வளரும் ஒரு வகை நீர்த்தாவரம். அசோலாவை உணவுப் பொருட்களாவும் பயன்படுத்தலாம். நீர்த்தாவரமாக இருப்பதால் தண்ணீரில் கரைந்திருக்கும் தாது உப்புக்களை கிரகித்து தழைச்சத்தை ஆகாயத்திலிருந்து கிரகித்துக்கொள்ளும் சிறப்புத் தன்மையும் உடையது. நீரில் நன்றாக பசுமையாக வளரும் அசோலாவை சேகரித்து உணவுப் பதார்த்தங்கள் தயாரிக்கலாம். நெல்வயலில் வளர்ந்துள்ள அசோலாவை பயன்படுத்தக்கூடாது. தனியாக சிமென்ட் தொட்டிகளில் அல்லது வயலில் தனியாக நாற்றங்கால் பாத்தி அமைத்து பூச்சி மருந்து தெளிக்காமல் வளர்த்து உணவாகப் பயன்படுத்தலாம். அசோலாவை எடுத்துக்கொண்டு வானலியில் போட்டு அத்துடன் வெங்காயம், பூண்டு ஆகியவற்றை சிறிது எண்ணெய் விட்டு நன்கு வதக்கி, உப்பு கலந்து கீரை தயாரித்து உணவாகப் பயன்படுத்தலாம். அசோலாவை கடலை மாவுடன் 4:1 என்ற அளவில் கலந்து தண்ணீர் விட்டு, வேண்டிய அளவு உப்பு கலந்து நன்றாக எல்லாவற்றையும் கலந்து எண்ணெயில் போட்டு பக்கோடா தயாரிக்கலாம். அசோலாவை உளுந்து மாவுடன் வேண்டிய அளவு கலந்து,

வெங்காயம் போட்டு வடை தயாரிக்கலாம். வடை மிக சுவை உடையதாகவும் நல்ல வாசனை நிறைந்ததாகவும் இருக்கும்.

முட்டையோடு அசோலாவை கலந்து ஆம்லெட் தயாரிக்கலாம். அசோலாவை தோசை தயாரிக்கவும் பயன்படுத்தலாம். தோசை மாவோடு அசோலாவை 5:1 என்ற விகிதத்தில் கலந்து அரைத்து, அரைத்த மாவை 10 மணி நேரம் புளிக்கவைத்து தோசை தயாரிக்கலாம். அசோலாவை மாட்டுத் தீவனமாக, கோழித் தீவனமாக, மீன் வளர்ப்பிற்கு பயன்படுத்தலாம்.

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## கோடைகாலத்தில் கோழிகளை விரட்டி பிடிக்கக் கூடாது

கோடை காலத்தில் கோழிகளை விரட்டிப் பிடித்தால், அவை பலவீனம் அடைகின்றன. கோடை என்றாலே கோழிகளுக்கு சோதனையான காலம்தான். சில பராமரிப்பு முறைகள் மூலம் நிவர்த்திக்கலாம். இறைச்சி கோழி வளர்ப்பைப் பொறுத்தவரை, கோடை காலத்தில் வெப்ப அதிர்ச்சி நோய் தாக்கும். சுற்றுப்புற கூடுதல் வெப்பநிலை தான், இதற்கு காரணம். இவற்றுக்கு இயற்கையில் வியர்வை சுரப்பிகள் கிடையாது. இதனால் கூடுதல் வெப்பத்தை, உடலில் இருந்து வியர்வை மூலம் வெளியேற்ற இயலாது.

இறைச்சி கோழிகளில் உடல் கொழுப்பு அதிகமிருப்பதால், கோழிக் கூட்டில் காற்றோட்டமான வசதி இல்லாதது, சுற்றுப்புற வெப்பத்தால் வெப்ப அதிர்ச்சி ஏற்படும். நோய் தாக்கிய கோழிகளுக்கு மூச்சிரைப்பு, சோர்வு ஏற்படும். இவை நிறைய தண்ணீர் குடிக்கும். தீனி அதிகம் சாப்பிடாது. பண்ணையின் பக்கவாட்டுச் சுவர் ஓரமாக ஒதுங்கி நிற்கும். பிற்பகலில் இறந்து விடும்.

பண்ணையில் தண்ணீர் வைக்கும் பாத்திரங்கள் அதிகமாக வைக்க வேண்டும். தண்ணீரில் ஐஸ்கட்டிகள் சேர்க்கலாம். கூரையின் மேல் வைக்கோலை பரப்பி, தண்ணீர் தெளித்து வைத்து வெப்பத்தைக் குறைக்கலாம். பக்கவாட்டில் ஈரச்சாக்குகளை தொங்கவிடலாம்.

உலர் தீவனமாக கொடுக்காமல், தண்ணீர் சேர்த்து கொடுக்க வேண்டும். விடியும் முன், மின்விளக்குகளை எரியவிட்டால், அந்நேரத்தில் தீவனம் சாப்பிட ஏதுவாக இருக்கும். நேரமாகும் போது வெப்பம் அதிகமானால், தீவனம் எடுப்பது குறையும். நூறு கோழிகளுக்கு 500 மில்லி கிராம் வீதம், "விட்டமின் சி' சத்து கொடுக்கலாம். குளிர்ந்த மோர் குடிக்க தரலாம். பத்து லிட்டர் தண்ணீரில் ஒரு எலுமிச்சம் பழத்தை பிழிந்து தரலாம்.

பண்ணைக்குள் கோழியின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும். அதிக எண்ணிக்கை இருந்தால் வெளி வெப்பநிலை கூடுதலாகும். ஒவ்வொரு கோழிக்கும் ஒன்றரை சதுர அடி இடம் தரவேண்டும்.

நோய் தாக்கினால், மருந்துகளின் மூலம் கட்டுப் படுத்தலாம்.

கறவை மாடுகளை வெப்பநோய் தாக்காமல் இருக்க, பசுந்தீவனங்களை தரவேண்டும். அடிக்கடி குளிக்க வைக்க வேண்டும். கம்பு, சோளம் போன்ற குளிர்ச்சியான தீவனங்களை அரைத்து தண்ணீரில் கலந்து தரலாம். பசுந்தீவனங்கள் இருந்தாலும் பால் உற்பத்தி அதிகரிக்கும். பசுந்தீவனங்களை உற்பத்தி செய்ய, தமிழக அரசு ஏக்கருக்கு ரூ.12ஆயிரம் வரை மானியம் தருகிறது.

**-டாக்டர் வி. ராஜேந்திரன், கால்நடை பராமரிப்புத் துறை, கொடைக்கானல்.**

## திருநெல்வேலி அல்வாவிற்கு சமமான வெள்ளைக்கத்தரி



நெல்லையில் அமரர் எஸ்.ஜி.முத்துசாமி பிள்ளை என்று சொன்னால் விவசாயிகள், கத்தரி சாகுபடியில் அவர் ஒரு ஜாம்பவான் என்பார்கள். கத்தரி சாகுபடிக்கு கோடை பட்டத்தை தேர்ந்தெடுப்பார். கத்தரி செடி வயலை சுற்றி ஆமணக்கு செடி விதையை ஊன்றுவார். ஆமணக்கு செடி மிக செழிப்பாக வளர்ந்து கத்தரி செடியை தரிசு வெக்கையிலிருந்து காப்பாற்றும். ஆமணக்கு விவசாயிக்கு வருவாயை உண்டாக்கித் தருகின்றது. பிண்ணாக்கு செக்குகள் வைத்து எண்ணெய் எடுக்கும் இடங்களில்தான் முத்துசாமி சாகுபடிக்கு பிண்ணாக்கு வாங்குவார். சாகுபடிக்கு அஞ்சாமல் அதிக பணம் செலவு செய்வார். அதாவது ஏக்கருக்கு செலவு ரூ.17,000 (இங்கு குறிப்பிட்டுள்ள சாகுபடி செலவுகள் எல்லாம் முத்துசாமி உயிரோடு செயல்பட்டுக்கொண்டிருந்தபோதுதான். தற்போது சாகுபடிசெலவு பல மடங்கு அதிகமாக இருக்கும்.)

கத்தரி சாகுபடியில் நட்ட இரண்டாவது மாதத்திலிருந்து வருமானம் கிடைக்கும். கத்தரியை விற்பனை காலத்தில் மூடைக்கு (65 கிலோ) ரூ.400ம் குறைந்தபட்ச விலை ரூ.130ம் கிடைக்கும்.

356 மூடை (சுத்தப்படுத்தியது) காய் விற்பனையில் மொத்த வருமானம் ரூ.65,000 கிடைத்துள்ளது. விவசாயிகளை முத்துசாமி வெள்ளைக் கத்தரி சாகுபடியில் அதிக லாபம் எடுத்ததுபோல் எடுக்க மூன்று தாரக மந்திரங்களை அனுசரிக்க வேண்டும் என்பார்.

1. கடுமையான உழைப்பு, 2. விஞ்ஞான தொழில்நுட்பங்களை அனுசரித்தல், 3. செயலாற்றல் திறனைக் காட்டுதல்.

இதோடு இயற்கை வழி சாகுபடி முறைகளையும் அனுசரித்து லாபம் காட்டியுள்ளார். இவர் பயிருக்கு சாகுபடியில் ஹியூமிசில் என்னும் டானிக்கினை மூன்று முறை தெளித்தும் மகசூல் எடுத்துள்ளார்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## வறட்சியை சமாளிக்க வளமான யோசனைகள்

வறட்சியை சமாளிக்க வளமான யோசனையை, விவசாயத் துறையின் (நீர்மேலாண்மை நிலைய) மதுரை துணை இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். வறட்சி என்பது ஆண்டுதோறும் பல வடிவங்களில் தோன்றும் இயற்கை கோளாறு. நெல், தோட்டப் பயிர்களுக்கு தேவையான தண்ணீர் கிணற்றிலோ, குளத்திலோ இல்லை என்றால், அதனை "வறட்சி' எனலாம். இதனால் விவசாயம் மட்டுமின்றி, அனைத்து தொழிலும் நசிந்துவிடும்.

வறட்சியின் தன்மை என்பது, பெய்த மழை 75 சதவீதம் எனில், குறைவான வறட்சி. மழை 50 சதவீதம் எனில் மிதமான வறட்சி. அதற்கும் குறைவு எனில், கடுமையான வறட்சி. இதுவும் அந்தந்த பகுதியின் சூழ்நிலைக் கேற்ப மாறுபடலாம்.

உதாரணமாக ஒருபோகம் மட்டும் வேண்டிய அளவு மழை பெய்யாமல், அடுத்த போகத்தில் வேண்டியளவு மழை பெய்தால், அது தற்காலிக வறட்சி. தொடர்ந்து 2 அல்லது 3 போகங்களுக்கு மழை பெய்யாவிட்டால் அதை நிரந்தர வறட்சி எனலாம்.

வறட்சி காலங்களில் எல்லா பகுதிகளிலும் கவனிக்க வேண்டிய வழிமுறைகளாக, மதுரை நீர்மேலாண்மை பயிற்சி நிலைய துணை இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது:

* களிமண் பகுதியில் நெல்லை நேரடி விதைப்பு செய்யலாம். திருந்திய நெல்சாகுபடி முக்கியம்.
* மணல் சார்ந்த இடங்களில் குறைந்த வயது பயறு வகைகள், எள் சாகுபடி.
* மாற்றுச் சால் பாசனம், தெளிப்பு நீர், சொட்டுநீர்ப் பாசனம், துல்லிய பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் நீர்இழப்பினை குறைக்கலாம்.
* நீர் குறைவாக தேவைப்படும் சிறுதானிய பயிர்கள், கடலை, சூரியகாந்தி, மரப்பயிர்கள் சாகுபடி,

மரங்களுக்கு உறிமட்டை பதித்தல், தென்னை நார்க் கழிவு, பசுந்தழை, தாள் உரம், எருஇடுதல் மூலம் ஈரத்தை வேர்ப்பகுதியில் இருத்தி வைக்கலாம்.

* மண், இலைகளில் இருந்து நீர் ஆவியாதலை தடுத்தல்.

* மாற்றுப் பயிர் திட்டம் செயல்படுத்தல்.

* வறட்சியை தாங்கும் மா, சப்போட்டா, சீமை இலந்தை, செர்ரி, கொய்யா, மாதுளை பழமரங்களை பயிர்செய்யலாம்.

* தொடர் வறட்சியில் வேர்அழுகல், சாம்பல்நோய், இலைப் பேன்கள், தத்துப்பூச்சி, மாவுப்பூச்சி, வெள்ளை ஈ தாக்குதலின் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடலாம்.

* விவசாயத்துடன் இணைந்த துணைத் தொழில்களான மாடு, கோழி, ஆடு, முயல், வாத்து, தேனீ வளர்ப்பு, காளான் வளர்ப்பு மூலம் தொடர் வருவாய் கிடைக்கலாம்.

இவை தவிர புதிய தொழில்நுட்பங்களான நிழல்வலைக் கூடம், பசுமை குடில்கள் மூலம் குறைந்த இடத்தில், குறைவான நீரில் அதிக வருவாய் பெறலாம். தொழு உரம், கம்போஸ்ட் உரம், பண்ணை குட்டை, கசிவுநீர் குட்டை, ஆழச்சால், அகலப்பாத்தி, சீசல் கலப்பை உழவு மூலம், மண்ணில் நீரை இருத்தி வைக்கலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

17.04.2013 A.M

## அமுதம், கூட்டுறவு கடைகளில் ரூ.20க்கு ஒரு கிலோ அரிசி திட்டம்



சென்னை : அமுதம் அங்காடி, கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகளில் யி20க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா இன்று துவக்கி வைக்கிறார். நந்தனம் தேவர் சிலைக்கு அருகில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிடங்கு வளாகத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும் நிகழ்ச்சியில் ஜெயலலிதா கலந்து கொண்டு திட்டத்தை துவக்கி வைக்கிறார்.

அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள், மற்றும் சிறப்பு அங்காடிகளில் 20 ரூபாய்க்கான ஒரு கிலோ அரிசி இன்று முதல் வழங்கப்படும். சென்னையில் 22 அமுதம் கூட்டுறவு அங்காடிகள், 143 சில்லரை அங்காடிகளிலும் 5 கிலோ, 10 கிலோ, 25 கிலோ எடை கொண்ட பைகளில் அரிசி விற்பனை செய்யப்படும்.

## உபாசி சங்க ஏலத்தில் சிறப்பு தேயிலைத்தூள் கிலோ விலை ரூ.1,750



குன்னூர் : குன்னூரில் சிறப்பு தேயிலைத் தூள் ஏல விற்பனை நடந்தது, அதில் அவதா தேயிலைத்தூள் கிலோ ரூ.1,750க்கு விற்கப்பட்டது. தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம் சார்பில் ஆண்டுதோறும் தங்க இலை விருதுக்கான போட்டி நடத்தப்பட்டு வருகிறது. இந்தாண்டு போட்டியில் பங்கேற்ற உற்பத்தியாளர்களின் சிறப்பு தேயிலைத் தூள், உபாசி சங்கத்தின் முதல் ஏலத்தின் மூலம் நேற்று முன்தினம் விற்பனைக்கு வந்தது.

இதில் மொத்தம் 71,338 கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 45,283 கிலோவும், டஸ்ட் ரகம் 26,055 கிலோவும் அடங்கும். மொத்தம் 42,639 கிலோ தேயிலைத் தூள் விற்பனையானது. இலை ரகம் 27,123 கிலோவும், டஸ்ட் ரகம் 15,566 கிலோவும் அடங்கும். இதன்படி 60 சதவீத தேயிலைத் தூள் விற்பனையாகி உள்ளது. அவதா தேயிலைத் தூளுக்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.1,750 கிடைத்தது.

கடந்த 3 ஆண்டுகளில் நடந்த சிறப்பு தேயிலை ஏலத்தில் கிடைத்ததை விட இது அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. 2வது ரக தேயிலைத் தூள் கிலோ ரூ.701க்கு விற்பனையானது. சி.டி.சி. டஸ்ட் ரகத்தில் அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.504ம், குறைந்தபட்சம் கிலோவுக்கு ரூ.103ம் கிடைத்தது.

இலை ரகத்தில் அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.1,750ம், குறைந்தபட்சமாக ரூ.101ம் கிடைத்தது. தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம் சார்பில் துவங்கப்பட்ட ஏல மையத்தில் நடந்த முதல் ஏலத்திலேயே 28,649 கிலோ தேயிலைத் தூள் தேக்கம் அடைந்தது குறிப்பிடத்தக்கது.

## கோதுமை ஏற்றுமதி 75 லட்சம் டன்னாக உயரும்



புதுடெல்லி: இந்தியாவில், நடப்பு வர்த்தக ஆண்டில் கோதுமை ஏற்றுமதி 75 லட்சம் டன்னை எட்டும் என்று உணவு மற்றும் விவசாய அமைப்பு (எப்.ஏ.ஓ) தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, எப்.ஏ.ஓ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கோதுமை விளைச்சல் அதிகரிப்பு, ஏற்கனவே கிடங்குகளில் பெருமளவில் குவிந்து கிடப்பது ஆகிய காரணங்களால், இந்தியாவில் இருந்து கோதுமை ஏற்றுமதி செய்வது மேலும் அதிகரிக்கும்.

ஜூன் மாதத்துடன் முடிவடையும் நடப்பு வர்த்தக ஆண்டில் கோதுமை ஏற்றுமதி 75 லட்சம் டன்னாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 2011,12 வர்த்தக ஆண்டில் (ஜூலை , ஜூலை) இந்தியாவில் இருந்து கோதுமை ஏற்றுமதி குறைந்த அளவிலேயே இருந்தது. இவ்வாறு அதில் கூறப்பட்டு ள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

17.04.2013 A.M

## ஆண்டிப்பட்டி பகுதியில் தக்காளி விலை Ôகிடு,கிடுÕ உயர்வு கிலோ ரூ.26-க்கு விற்பனை

கண்டமனூர்,

ஆண்டிப்பட்டி பகுதி யில் தக்காளி வரத்து குறைவால் விலை கிடு, கிடுவென உயர்ந்துள் ளது. கிலோ ரூ.26-க்கு விற்பனை ஆனது.

தக்காளி சாகுபடி

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி சுற்றுவட்டார பகுதி களான கண்டமனூர், கணேசபுரம், தெப்பம்பட்டி, ஜி.உசிலம்பட்டி, சித்தார்பட்டி, ராஜதானி, கதிர்நரசிங்கபுரம் உள்பட பல்வேறு கிராமங் களில் ஆண்டுதோறும் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஒட்டுரக தக்காளியை விவ சாயிகள் சாகுபடி செய்து வந் தனர். கடந்த சில ஆண்டுகளாக போதிய மழையின்றி தண்ணீர் பற்றாக்குறை காரணமாகவும், மின்வெட்டு பிரச்சினை யாலும், தக்காளி சாகுபடி பரப்பளவு குறைந்து வரு கிறது.

குறிப்பாக கடந்த 2 மாதங் களுக்கு முன்பு ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப் பளவில் மட்டும் ஒட்டுரக தக்காளி சாகுபடி செய்யப் பட்டது. இந்நிலையில் கடுமை யான வெயில் தாக்கம் காரண மாக இந்த பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி செடிகளில் கருகல் நோய் ஏற்பட்டு செடிகளில் காய்ப்பு ஏற்படவில்லை.

விலை உயர்வு

சுமார் 1,500 ஏக்கர் பரப் பளவில் தான் தற்போது தக் காளி விளைச்சல் அடைந் துள்ளது. இந்த பகுதியில் விளைச்சல் அடைந்த தக்காளி களை, ஆண்டிப்பட்டி மற்றும் கண்டமனூர் சந்தைகளுக்கு கொண்டு சென்று மொத்த விலைக்கு விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.

சந்தையில் கடந்த சில வாரங் களாக சரிந்து வந்த தக்காளி விலை இந்த ஆண்டு விளைச் சல் குறைவு மற்றும் வரத்து குறைவு காரணமாக நேற்று உயரத்தொடங்கி உள்ளது. நேற்று கண்டமனூர் சந்தையில் 15 கிலோ எடை கொண்ட தக்காளி பெட்டி ரூ.400 என்ற அளவில் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப் பட்டது.

இதன்மூலம் கிலோ ரூ.10 என்ற அளவில் விலை வீழ்ச்சி யால் பரிதவித்த தக்காளி சாகுபடி விவசாயிகள் இந்த திடீர் விலை உயர்வு காரண மாக மகிழ்ச்சி அடைந்துள்ள னர். அதே நேரத்தில் கடும் வெயில் காரணமாக கருகல் நோயால் பாதிக்கப்பட்டு தக்காளி செடிகள் விளைச்சல் அடையாமல் பரிதவித்த விவசாயிகள் மிக வும் கவலை அடைந்துள்ளனர்.

தக்காளி மொத்த கொள் முதல் விலையே கிலோ ரூ.26 என்ப தால் சில்லறை விற்பனை யில் கிலோ ரூ.30 முதல் ரூ.35 வரை விலை உயர்ந்து விற்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சின்னமனூர் பகுதியில் சூறாவளி காற்று: வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து நாசம் விவசாயிகளுக்கு ரூ.4 கோடி நஷ்டம்

தேனி,

சின்னமனூர் பகுதியில் பலத்த சூறாவளி காற் றில் ஒரு லட்சத்திற்கும் மேற் பட்ட வாழை மரங்கள் குலையுடன் சாய்ந்து விழுந்தன. இதனால் ரூ.4 கோடி அளவில் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு உள்ளது.

சூறாவளி காற்று

தேனி மாவட்டம், சின்ன மனூர் அருகே உள்ள ஓடைப் பட்டி, சீப்பாலக்கோட்டை பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. இந்த பகுதிகளில் திராட்சை பழங்களுக்கு அடுத்தபடியாக வாழை சாகுபடி அதிக அள வில் நடைபெறுகிறது. இந்த வாழை மரங்கள் நல்ல விளைச் சல் அடைந்து இருந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் இன்னும் 15 நாட்களில் வாழை குலைகள் வெட்டும் நிலையில் இருந்தன.

சின்னமனூர், ஓடைப்பட்டி சுற்றுவட்டார பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பலத்த மழை பெய்தது. சுமார் 1Ñ மணி நேரம் தொடர்ந்து மழை கொட்டித் தீர்த்தது. இதனை தொடர்ந்து நள்ளிரவில் சின்னமனூர், சீப்பாலக் கோட்டை பகுதியில் பலத்த சூறாவளிக் காற்று வீசியது.

ரூ.4 கோடி வாழைகள் நாசம்

பல மணி நேரத்திற்கு பலத்த காற்று வீசியதால் அந்த பகுதி யில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த வாழைகள் தாக்குப் பிடிக்காமல் குலையுடன் முறிந்து விழுந்தன. சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த 1 லட்சத்து 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து சேதம் அடைந்தன.

இதனால் இந்த பகுதிகளைச் சேர்ந்த விவசாயி களுக்கு சுமார் ரூ.4 கோடி அளவில் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது.
முந்தைய நாளில் கம்பீரமாக நின்ற வாழைகள் சில மணி நேர காற்றுக்கு ஒடிந்து விழுந்ததை பார்த்த விவசாயி கள் சிலர் வேதனையில் கண்ணீர் வடித்த காட்சிகள் பரிதாபத்தை ஏற்படுத்தியது.

விவசாயிகள் கண்ணீர்

பருவமழைகள் ஏமாற்றிய நிலையில் கிணற்றுப் பாசனத்தையும், ஆழ்குழாய் கிணற்று தண்ணீரை கொண்டு கண்ணும், கருத்துமாக காப் பாற்றி வந்த வாழைகள் ஒரே நாளில் அடியோடு சாய்ந்து போனதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு போதிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இதுகுறித்து சீப்பாலக் கோட்டையை சேர்ந்த விவ சாயி மணி கூறும் போது,Ôநான் சுமார் 2 ஆயிரம் வாழை மரங் களை தோட்டத்தில் வளர்த்து வந்தேன். இதில் 1,800-க்கும் மேற்பட்ட வாழைகள் சூறைக் காற்றுக்கு முறிந்து விழுந்து உள்ளது. இந்த நஷ்டத்தை எப்படி சமாளிப்பது என்று தெரியவில்லை. கஷ்டப்பட்டு வளர்த்த வாழைகள் முறிந்து போய் கவலையை கொடுத்து உள்ளது. பாதிக்கப்பட்ட விவ சாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும்Õ என்றார்.

## இலுப்பூர் அருகே ஓலைமான்பட்டியில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள்& இடுபொருட்கள் உழவர் பெருவிழாவில் வழங்கப்பட்டன

இலுப்பூர்,

இலுப்பூர் அருகே உள்ள ஓலைமான்பட்டியில் நடந்த உழவர் பெருவிழா வில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

உழவர் பெருவிழா

அன்னவாசல் வட்டாரத் தில் வேளாண்மை துறை சார்பில் இலுப்பூர் வருவாய் கிராமத்தில் உள்ள ஓலை மான்பட்டி கிராமத்தில் உழவர் பெருவிழா நடை பெற்றது.

விழாவிற்கு பேரூராட்சி தலைவர் ராஜமன்னார் தலைமை தாங்கினார். அன்னவாசல் முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் சின்னத்தம்பி உழவர் பெருவிழாவிற்கான ரதத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பேரூராட்சி கவுன்சிலர், பாப்பான்குடி தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் திருத்துவம் மற்றும் முன்னோடி விவசாயிகளான செல்வராஜ், முருகேசன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொழில்நுட்ப செயல்விளக்கம்

விழாவிற்கு வேளாண்மை துறை, தோட்ட கலைத்துறை, அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டம், வேளாண் அறிவியல் நிலையம், பொதுப்பணித் துறை, வேளாண் வணிகம் ஆகிய துறைகளை சேர்ந்த அலுவலர்கள், தங்களது துறை சேர்ந்த திட்டங்கள் பற்றி எடுத்து கூறினார்கள்.

வேளாண்மை துறை அலுவலர் மற்றும் அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் கலந்து கொண்டு மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி செய்தல், எலி ஒழிப்பு, கோனோவீடர்களைக் கருவியை பயன்படுத்தி களை களை கட்டுப்படுத்தும் முறை, இலை வண்ண அட்டை பயன் படுத்தும் முறை போன்ற தொழில்நுட்ப செயல் விளக்கம் செய்து காண்பித் தனர். விவசாயிகளுக்கு சிறு கண்காட்சி வைக்கப்பட்டிருந் தது.

வேளாண் கருவிகள்- இடுபொருட்கள்

இந்த விழாவில் 250-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகள் வாயிலாக வேளாண்மை திட்டங்கள் பற்றிய தொழில் நுட்பங்கள் ஆடல், பாடல் மூலம் விளக்கப்பட்டது. நடமாடும் வேளாண்மை விரி வாக்க மைய ரதம், வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட குக்கிராமங்களுக்கு சென்று வந்தது. வேளாண் திட்டங்கள் மற்றும் செயல் விளக்கங்கள் பற்றி வேளாண்மை அலுவலர் சுமித்ராதேவி, எடுத்து கூறி னார்.

இந்த விழாவில் விவ சாயிகளுக்கு மானிய விலையில் நுண்சத்துக்கள், கைத்தெளிப்பான், விசைத் தெளிப்பான், மின் மோட் டார், ஜிப்சம் ஆகிய இடு பொருட்கள் வழங்கப் பட்டன.

கையேடுகள்

மேலும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள், தொழில்நுட்ப கையேடுகள், தொழில்நுட்ப பிரசுரங்கள் ஆகியவை வழங்கப்பட்டன.முன்னதாக வேளாண்மை உதவி இயக்குநர் சிங்காரம் வரவேற்று பேசினார். முடிவில் உதவி வேளாண் ராஜ்குமார் நன்றி கூறினார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட அலுவலர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

## ஆலத்தூர் தாலுகாவில் ரூ.108 கோடியில் மருதையாற்றில் நீர்தேக்கம் முதல்&அமைச்சருக்கு 10 கிராம மக்கள் நன்றி

பெரம்பலூர்,

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகாவில் மருதையாற்றின் குறுக்கே ரூ.108 கோடி மதிப்பில் நீர்த்தேக்க திட்டத்தை அறிவித்தமைக்காக 10 கிராம மக்கள் கலெக் டரை சந்தித்து முதல்-அமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர்.

ரூ.108 கோடியில் நீர்தேக்கம்

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, கொட் டரை ஆதனூர் இடையே சுமார் 465 ஏக்கர் பரப்பளவில் மருதையாற்றின் குறுக்கே ரூ.108 கோடி செவில் புதிய நீர் தேக்கம் அமைக்கப்படும் என்று முதல்-அமைச்சர் கடந்த சில தினங்களுக்கு முன்பு அறிவித்தார்.

மருதையாறு நீர்தேக்கம் கட்டுவதால் பாசன வசதி பெறும் கிராமங்களான கூட லூர், சாத்தனூர், தொண்டப் பாடி, கூத்தூர், அழகிரி பாளை யம், புஜங்கராய நல் லூர், நொச்சிக்குளம், ஆதனூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த கிராம பொதுமக்கள் ஆலத்தூர் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் என்.கே.கர்ணன், ஒன்றியக்குழுத்தலைவர் வெண்ணிலா, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தெரணி-மலர்விழி கலியமூர்த்தி, காரை -சங்கீதாகலைவாணன், கூடலூர்- ராஜேந்திரன், கூத் தூர் -ரகுபதி, அல்லி நகரம்- மகேஸ்வரி முருகேசன் மற்றும் உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் ராமராஜ், மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கலெக்டர் தரேஸ் அகமதுவை சந்தித்து நீர் தேக்கம் கட்டும் திட்டத்தை அறிவித்தமைக்காக முதல்- அமைச்சருக்கு நன்றி தெரி வித்து கடிதம் கொடுத்தனர்.

கடிதம்

அந்த கடிதத்தில் கூறி இருப் பதாவது. ஆலத்தூர் ஒன்றியம் கொட்டரை கிராமத்தில் வரலாற்று சிறப்பு மிக்க சிறந்த திட்டமான மருதையாறு நீர்¢த் தேக்க திட்டத்திற்கு ரூ.108 கோடி நிதிஒதுக்கீடு செய்து சுற்றுப்புற விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளிஏற்றிய முதல்- அமைச்ச ருக்கு மன மார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆலத்தூர் ஒன்றியத்தில் சுமார் 10 வருவாய் கிராமங் களில் வசிக்கும் சுமார் 4 ஆயிரத்து 500 ஏக்கர் பாசன வசதி பெறும் இந்ததிட்டத்தை அரசு உடனடியாக தொடங்கி எங்கள் பகுதி விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்த திட்டத்திற்காக கையகப் படுத்தப்படும் நிலங் களின் உரிமை யாளர்களுக்கு உரிய இழப்பீட்டு தொகையும், அரசு சார்பில் வேலை வாய்ப்பும் ஏற்படுத்தி தருமாறு அரசுக்கு பரிந்துரை செய்திட வேண்டுகிறோம். இவ்வாறு அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## வேளாண்மைதுறை சார்பில் வேங்காம்பட்டியில் உழவர் பெருவிழா

லாலாப்பேட்டை,

கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை மற்றும் சகோதர துறைகள் சார்பில் உழவர் பெருவிழா நடை பெற்றது.

உழவர் பெரு விழா

தமிழக அரசின் பல்நோக்கு திட்டங்களை முழுவதும் செயல்பட்டு வருகின்றன.அதன்படி தமிழகம் முழுவதும் ஏப்ரல் 14-ந் தேதி முதல் மே மாதம் 17-ந் தேதி வரை உழவர் பெருவிழா வேளாண்மை துறை சார்பில் நடைபெறு கிறது.

அதன்படி கிருஷ்ண ராயபுரம் ஒன்றியத்தில் உள்ள கருப்பத்தூர் ஊராட்சியில் உள்ள வேங்காம்பட்டி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

கருப்பத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ராஜலிங்கம் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். கருப்பத்தூர் துணைத் தலைவர் சுந்தரம் முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் ராஜவேலு வரவேற்றார். இதில் சுற்றுபுற கிராமங்களில் இருந்து ஏராளமான விவசாயிகள் கலந்து கொண் டனர்¢¢.

அதிக காய்கறி உற்பத்தி

தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் பேசும் போது , கிராமப்புற விவசாயிகள் குழிதட்டு மூலம் நாற்று விடும்போது காய்கறி அதிக உற்பத்தி கிடைக்கும். நாற்று வீரியமாகவும் பூச்சி தாக்குதல் குறைந்தும் நல்ல மகசூல் கிடைக்கும். இதனால் விவசாயிகளுக்கு குறைந்த செலவும் அதிக காய்கறி உற்பத்தியும் கிடைக்கும் என்றார். விதைச்சான்று துறை,

கால்நடைதுறை, பட்டு வளர்ப்பு, வேளாண் பொறியல்துறை போன்ற துறைகளில் இருந்து அலுவலர்கள் கலந்து கொண்டு பேசினர்.

விவசாயிகளுக்கு வெண்டை விதை மற்றும் மண்வள அடையாள அட்டை, மருந்து அடிக்கும் கருவி ஆகியவை வழங்கப் பட்டன.
கால்நடை உதவி மருத்துவர் சையத் அஸ்லாம், உதவி பொறியாளர்,அஜிமல்கான், விதைசான்று அலுவலர் தியாகராஜன், பட்டு வளர்ப்பு ஆய்வாளர் பெரியசாமி, உழவர் பேராசிரியர் சதீஷ் குமார், வேளாண்மை உதவி இயக்குனர், பாலகிருஷ்ணன் செய்து இருந்தா£

## கோம்புபாளையத்தில் உழவர் பெருவிழா

நொய்யல்,

கோம்புபாளையத்தில் வேளாண்மைதுறை மற்றும் சகோதரத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது.

உழவர் பெருவிழா

தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் அறிவித்து உள்ளபடி 2-வது பசுமை புரட்சியை ஏற்படுத்துவதற் காக பல்நோக்கு திட்டங்களை செயல்படுத்திட கடந்த 14-ந் தேதி (சித்திரை 1-ந் தேதி) முதல் வருகிற 15-5-2013 வரை கரூர் வட்டாரத்தில் உழவர் பெருவிழா நடைபெற உள்ளது. அதன்படி முதல் நிகழ்ச்சியாக கரூர் மாவட்டம் கோம்புபாளையம் சமுதாய கூடத்தில் வேளாண்மை துறை மற்றும் சகோதரத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்றது.

ஆலோசனைகள்

விழாவுக்கு திருச்சி வேளாண்மை கல்லூரி பேராசிரியர் கஜேந்திரன் தலைமை தாங்கி, விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோ சனைகளை வழங்கினார். மேலும் விவசாயிகளின் கேள்விகளுக்கு உரிய பதில் அளித்தார். கோம்புபாளையம் ஊராட்சி தலைவர் பசுபதி முன்னிலை வகித்தார்.
வேளாண்மை துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண் வணிகத் துறை, கால்நடைத்துறை, பட்டு வளர்ச்சி துறை, கூட்டுறவு துறை, விதை சான்றிதழ்துறை, மீன்வளத் துறை, வருவாய்த்துறை, பொது பணித்துறை, பால் வளத்துறை (ஆவின்), வனத் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், வேளாண்மை அறிவியல் நிலையம், நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை, நபார்டு மற்றும் முன்னோடி வங்கிகள், சர்க்கரை ஆலை, இடுபொருள் விற்பனையாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த அலுவ லர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கலந்து கொண்டவர்கள்

விழாவில் தலைமை ஆசிரியர் ராமமூர்த்தி, ஊராட்சி துணை தலைவர் திலகவதி, ஊராட்சி உறுப்பி னர்கள் ராஜா, அசோகன், சாந்தி, செல்லமுத்து, கார்த்தி, ஊராட்சி செயலர் தனராசு மற்றும் 100-க்கணக்கான விவசாயிகள் கலந்து கொண்ட னர்.

## ஜவ்வாதுமலை தேன் விற்பனை விரைவில் தொடங்க உள்ளது கலெக்டர் விஜய்பிங்ளே தகவல்

திருவண்ணாமலை,

ஜவ்வாதுமலை தேனுக்கு அக்மார்க் பதிவு பெறப்பட்டுள்ளது என்றும் விரைவில் தேன்விற்பனை தொடங்க உள்ளதாகவும் கலெக்டர் விஜய்பிங்ளே கூறினார்.

மகளிர் திட்ட பணிகள்

திருவண்ணாமலை கலெக்டர் லுவலகத்தில் ஊரக வளர்ச்சி துறையின் மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் கலெக்டர் விஜய்பிள்ளே தலைமையில் நடந்தது. கூட்டத்தில் மகளிர் திட்டம் மூலம் செயல்படுத் தப்படும் பணிகளை உரிய காலத்தில் முடிக்க வேண்டும், துரிஞ்சாபுரம், கலசபாக்கம், வெம்பாக்கம், ஆரணி ஆகிய பகுதிகளில் நடைபெறும் பணிகளையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு களுக்கு மறு சீரமைப்பு பணி களை உடனடியாக முடிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

புது வாழ்வு திட்டம்

இதே போன்று புதுவாழ்வு திட்ட பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அதில் கலெக்டர் விஜய்பிள்ளே பேசியதாவது.

முதியோர் உதவி தொகை பெற தகுதி உள்ள அனைத்து முதியோருக்கும் உதவி தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய கூலி, குறு விவசாயிகளுக்கு உழவர் பாதுகாப்பு அட்டை, மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும். மாணவர் களுக்கு கல்வி உதவித்தொகை, மற்றும் கல்வி கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தேன் விற்பனை

மேலும் ஜவ்வாது மலை தேன் விற்பனைக்கு அக்மார்க் பதிவு பெறப்பட்டுள்ளது. அதன்படி 50மற்றும் 100 கிராம் பாட்டில்களில் அடைக் கப்பட்டு கடைகளில் விற் பனை தொடங்கப்படும். மேற் கண்டவாறு கலெக்டர் பேசினார். கூட்டத்தில் மகளிர் திட்ட மேலாளர் பாண்டியன், புது வாழ்வு திட்ட மேலாளர் முர்த்தி, முன்னோடி வங்கி மேலாளர் சேகர், நபார்டு வங்கி மேலாளர் சுதர்சன் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.